உ

சிவமயம்

திருக்குடந்தை

# ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர் ஆலய தல வரலாறு




ஸ்ரீ ஆதிகும்பேஸ்வரர் தேவஸ்தான வெளியீடு

1968

விலை 0—75

## ஸ்ரீ மங்களாம்பிகை

(ஸ்ரீ மந்த்ரபீடேஸ்வரி)



அம்பாள் — கமலவாகனம்



அம்பாள் — கிளி வாகனம்

உ

சிவமயம்

கும்பகோணம்

# ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் கோயில் வரலாறு

(திருக்குடமூக்கு)

# மகாமக வெளியீடு

திருச்சிராப்பள்ளி ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியரும்,
அறநிலையப் பாதுகாப்பு இலாகா (H. R. & C. E.) ஆதரவில்
பல கோயில் வரலாறுகளை எழுதியவரும் ஆகிய
திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால்
எழுதப்பெற்றது.

ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரசுவாமி தேவஸ்தான வெளியீடு

1968

உரிமை செய்யப்பெற்றது]

[விலை 75 காசு

உ
சிவமயம்

# பதிப்புரை

இச் சிறுநூல் திருக்குடந்தை ஸ்ரீ மங்களாம்பிகை சமேத ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரரின் திருவரலாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலியவற்றின் சிறப்பு வரலாறு முதலிய முக்கிய உண்மைப் பொருள்களை எல்லா மக்களும் உணர்ந்துகொள்ளும் பொருட்டு மிகக் குறைந்த விலையில் விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நூல் இந்துமத அற நிலையப் பாதுகாப்பு (H. R. & C. E.) ஆணையர், உயர்திரு. A. ராதாகிருஷ்ணன் M. A., B. L., துணை ஆணையர், உயர்திரு. T. N. சிங்காரவேலு முதலியார் B. A., B. L., உதவி ஆணையர், உயர்திரு. P. S. கோபால்சாமி B. A., B. L., அவர்களின் ஊக்கத்தினால் வெளியிடப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் யாவரும் படித்துப் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

V. S. வெங்கடாசலம் பிள்ளை,
நிர்வாக அதிகாரி.

C. P. ராமதாஸ்,
நிர்வாக தர்மகர்த்தா

G. K. சுந்தரம் பிள்ளை,
S. S. ராமசாமி உடையார்,
தர்மகர்த்தர்கள்.

# முன்னுரை

காவிரிநதி பாயும் சோழ நாட்டில் நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சாவூர் ஜில்லா, கும்பகோணம் தாலுக்காவில் சிறப்பக் களஞ்சியமாகிய பல கோயில்களைக்கொண்ட கும்பகோணத்தில் சிறந்து விளங்குவது ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் கோயிலாகும். இது திருக்குடமூக்கு எனப்படும். பிரளயத்தில் மிதந்துவந்த அமுதகும்பத்து மூக்கின் வழியே அமுதம் பரவியதால் குடமூக்கு எனப் பெயர்பெற்றது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடிய தேவாரப் பாடல்களையுடையது. உலகமெலாம்போற்றும் மகாமக தீர்த்தத்தை உடையது. தலபுராணம் முதலிய பல பிரபந்தங்களைக் கொண்டது. ஆன்றோர்கள் அமைத்த ஆலயங்களே தெய்வ உணர்ச்சியை உண்டாக்கும் சிறப்பிடங்களாகும். அவ்விடங்களுக்குச் சென்று வழிபடுவது மிகவும் நல்லது. கோயிலுக்கு வருவோர் கோயிலின் பெருமைகளையும் அறிந்துகொள்வது நலம். சென்னை அறநிலைய பாதுகாப்பு இலாகா (Hindu Religious and Charitable Endowments) அனுப்பிய சுற்றறிக்கையின்படி, மகா வித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய திருக்குடந்தைப் புராணத்தைத் தழுவியும், டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் எழுதிய குறிப்புகளைக் கொண்டும், தேவஸ்தான வெளியீட்டின் முன் பதிப்பைத் தழுவியும் இவ் வரலாறு சுருக்கமாய் எழுதப்பெற்று H. R. & C. E. துணை ஆணையாளர் (Dy. Commissioner) திரு. T. N. சிங்காரவேலு முதலியார் B. A., B. L., அவர்களால் அங்கீகாரம் செய்யப்பெற்றது.

பழங்காலச் சின்னங்களாகிய கோயிற் சிற்பங்களைப் பாதுகாப்பதிலும், தல வரலாறுகளை வெளியிடச் செய்வதிலும், தற்போதுள்ள அறநிலையப் பாதுகாப்புத் தலைவர்கள் வேண்டுவன செய்து வருகிறார்கள். இதில் கோயில் விளக்கமும், மூர்த்தி, தலம், தீர்த்தங்களின் பெருமைகளும், தேவாரம் முதலிய துதிப்பாடல்களும் சேர்க்கப்பட்டு உள்ளன. 14—2—1968-ல் நிகழும் மகாமக விழாவின் அங்கமாக இது வெளியிடப் படுகிறது. அன்பர்கள் படித்து ஸ்ரீ ஆதி கும்பேசப் பெருமானது திருவருளைப் பெறுவார்களாக.

**C. P. ராமதாஸ்,**
நிர்வாக தர்மகர்த்தா.
ஸ்ரீ ஆதிகும்பேசுவரசுவாமி தேவஸ்தானம், கும்பகோணம்.


# உள்ளடக்கம்


1 கோயில்களும், குறிகளும்
2 கோயிலும், இருப்பிடமும்
3 கும்பகோணம்
4 கோயிலின் அமைப்பு
5 கோயிலின் படம்
6 மூர்த்திகளின் பெயர்கள்
7 பிறகோயில்கள்
8 தீர்த்தங்கள்
9 தலப் பெருமைகள்
10 திருப்பணிகள்
11 சிற்பங்கள்
12 வருமானமும், சொத்துக்களும்
13 நிர்வாகம்
14 கல்வெட்டுகள்
15 தினப்பூஜையும், திருவிழாக்களும்
16 மகாமகப் பெருவிழா
17 புராண வரலாறுகள்
18 இலக்கியப் பாடல்கள்.


# கோயில் விளக்கம்

| | | |
|---|---|---|
| கோயில் | — | திருக்குடமூக்கு |
| விநாயகர் | — | ஆதி விநாயகர் |
| மூலவர் | — | ஆதி கும்பேசர் |
| அம்மன் | — | மங்களநாயகி |
| தீர்த்தம் | — | மகாமகக்குளம், காவிரி |
| மரம் | — | வன்னிமரம். |

காவிரிக்குத் தென்கரையிலுள்ள ஸ்தலங்களில் ஒன்று. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் பாடிய தேவாரப் பதிகங்களையும், மற்றும் பல பிரபந்த பாடல்களையும் உடையது.



கோயிலின் ஆகாயத் தோற்றம்



முற்றவெளி மண்டபம்

உ

## கும்பகோணம்

# ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர்கோயில் வரலாறு

## ( திருக்குடமூக்கு )

தொண்ட ராகித் தொழுது பணிமினே
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்
விண்ட வர்புரம் மூன்றொரு மாத்திரைக்
கொண்ட வன்உறை யுங்குட மூக்கிலே.

— திருநாவுக்கரசர்

## 1. கோயில்களும் குறிகளும்

---

தென்னாடாகிய தமிழ் நாடு, மிகுதியான கோயில்களைக் கொண்ட இடம் ஆகும். நாட்டை வளப்படுத்தும் ஆறுகளும், சோலைகளும், வாவிகளும், சாலைகளும் சூழ்ந்து இயற்கைக் காட்சிகளைத் தந்து இன்பம் ஊட்டுகின்றன. வானளாவிய கோபுரங்களும், விமானங்களும், தூபிகளும் காண்போர்க்கு தூரத்திலிருந்தபடியே தெய்வ உணர்ச்சியைத் தூண்டும் நிலையில் அமைந்துள்ளன. உடலுக்கு உணவைத்தரும் நிலங்கள் அமைந்திருப்பது போல, உள்ளத்துக்கு ஆன்மாவுக்கு உணவாகிய பக்தி உணர்ச்சியை உண்டாக்கும் பாங்குடைய கோயில்கள் பல அணிகளாக விளங்குகின்றன. "திருக்கோயில் இல்லாத திருவிலூரும், பாங்கினோடும் பலதளிகள் இல்லாவூரும் அவை எல்லாம் ஊரல்ல" என்றபடிக்கில்லாமல் நாட்டின் பல இடங்களிலும் சைவ, வைணவத் தலங்கள் பல ஆங்காங்கு மிளிர்கின்றன. இவ்வகையில் தென்னாடு தெய்வ மணங்கமழும் திருநாடாகத் திகழ்கிறது.

ஆதி அந்தங்கடந்த பரம்பொருளாகிய இறைவன், உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் பெற்று உய்யும் வண்ணம் தன் கடந்த அருவ நிலையிலிருந்து இறங்கி, இப்பூவுலகத்தில் ஆங்காங்குள்ள பல தலங்களில் உருவத் திருமேனிகொண்டு எழுந்தருளியிருந்து பக்தியுடன் வழிபடும் அடியார்களுக்கு அருள் செய்து வருகிறுன். அத் தகைய சிறப்பிடங்களே ஆலயங்கள் ஆகும். பசுவின் உடல் முழுவதும் பால் பரவியிருந்த போதிலும், மடியின் மூலமாகவே பால் வெளிப்படுவது போலவும், சூரியன் எங்கும் பரவியிருந்த போதிலும் பளிங்குக் கல்லின் மூலமே கிரணங்கள் வெளிப் படுவதுபோலவும், நிலத்துக்கடியில் நீரோட்டம் இருந்தாலும், தோண்டிய இடத்தில்தான் நீர் வெளிப்படுவது போலவும், இறைவன் எங்கும் வியாபித்திருந்தபோதிலும், பெரியோர் கள் அமைத்த ஆலயங்களிலுள்ள மூர்த்திகளின் மூலமாகவே இறைவன் வெளிப்பட்டு அன்பர்களுக்கு அருள் செய்வான். "இருஞ்சுரபிக் கெங்கும் உருக்காண ஒண்ணுத பால் முலைப் பால் விம்மி ஒழுகுவது போல் வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே".—சிவஞான சித்தியார்.

**"எங்கும் சிவனிருப்பன் ஆனுலும் ஏசற்ற**
**சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்—லிங்கத்தும்**
**ஆவினுடம் பெல்லாமும் ஆவரித்து நிற்கினும்பால்**
**பாவு முலைக்கண் விகுதிப் பார்"**

**(சிவஞானப்பிரகாச வெண்பா)**

இவ்வாறு புறத்தே கோயில்கொண்டு விளங்கும் பெரு மான், பக்தியுடன் வழிபடும் அடியார்களின் உள்ளத்தையும் கோயிலாகக்கொண்டு அருள் செய்கிறுன். "காலையும் மாலையும் கைதொழுவார் மனம் ஆலயமாகும்." —அப்பர்.

நமது முன்னேர்களின் நாகரீக வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவன முன்னேர்கள் எழுப்பித்த திருக் கோயில்களாகும். இவைகள் பக்தியை உண்டாக்கும் இடங்களாவதன்றிப் பெருஞ்சிற்பங்கள் நிறைந்த பெட்டகங் களும் ஆகும். மேலும் மின்சார அணுக்கள் நிறைந்துள்ள

இடம் (Power House) போலத் தெய்வீகத் திருவருள் அணுக்கள் செறிந்துள்ள சிறப்பிடங்களாகும். எழுத்தின் ஒலி வடிவை உணர்த்துவதற்கு வரி வடிவெழுத்து அமைந்தது போலக் கட்புலனால் காணமுடியாத கடவுளை வணங்குவதற்குக் கோயில்கள், கடவுளைக் காட்டும் சட்டகங்களாக விளங்குகின்றன. இவைகளை நம் முன்னோர்கள் தம் உயிரினும் மேலாகப் பாதுகாத்துப் பின் வழியினராகிய நமக்கு அருஞ் செல்வங்களாக வைத்துச் சென்றார்கள். நாட்டின் நலத்துக்கும், மக்களின் நல்வாழ்வுக்கும் கோயில்கள் இன்றியமையாதன. வாழ்க்கைக் கடலில் அகப்பட்டுத் துன்புறும் மக்களுக்கு கோயில்கள் கலங்கரை விளக்கங்களாக (Light House) விளங்குகின்றன. "கோயில் விளங்க குடி விளங்கும்" "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பவை ஆன்றோர் கூறிய அனுபவ மொழிகளாகும்.

ஆதலின் பெறுதற் கருமையான மனிதப் பிறவியைப் பெற்றவர் அனைவரும், கோயில்களில் குடிகொண்ட பசுபதியாகிய பரமனை அன்பினால் வழிபட்டு அவன் வகுத்த நன்னெறியில் சென்று அவனருளைப் பெற முயலுதல் சிறந்த கடமையாகும். "மானுடப் பிறவிதான் வகுத்தது மனவாக் காயத்து ஆனிடத்தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ" என்று ஆன்றோரும் கூறியுள்ளார். "உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பில் உத்தமனைக்காண்" என்று ஔவையாரும் பகர்ந்துள்ளார்.

## 2. கோயிலும் இருப்பிடமும்


தென்னாடாகிய தமிழ் நாட்டில் பெருமான் உறையும் கோயில்கள் பல உள்ளன. அவை சிவன் கோயில்கள், முருகன் கோயில்கள், திருமால் கோயில்கள், அம்மன் கோயில்கள் முதலியன. இவைகளில் அந்தந்த சமயத்தலைவர்களால் தேவாரப்பதிகம் பாடப்பெற்ற தலங்களும், பெயர் மட்டும் குறிக்கப்பெற்ற வைப்புத் தலங்களும், தல புராணங்களைக் கொண்ட கோயில்களும், புலவர்களால் தனிப் பாடல்பெற்ற தலங்களும், பிற்காலத்தில் பக்தர்களால் அமைக்கப்பெற்ற

அபிமானத் தலங்களும் அடங்கியுள்ளன. இவைகளில் தேவாரப் பாடல்கள் பெற்ற 274 தலங்களில், காவிரிக்குத் தென்கரையில் உள்ள 127 தலங்களில், **திருக்குடமூக்கு** என்னும் தேவாரப் பெயர்கொண்ட ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் கோயில் சிறப்புப் பல பெற்றதொன்றாகும். இது கும்பகோணத்திலுள்ள பல கோயில்களுள் முதன்மையான கோயிலாகும். இத் தலத்தைக்குறித்து திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தேவாரப் பதிகம் பாடியுள்ளார்கள்.

எப்போதும் வற்றாத நீர்ப்பெருக்கையுடைய காவிரி நதி பாயும் நாடு சோழநாடு. இதற்கு வளவநாடு, சென்னி நாடு, அபயநாடு, கிள்ளிநாடு, செம்பியர்நாடு, அகளங்கநாடு, பெருநீர் நாடு, பொன்னிநாடு முதலிய பெயர்களும் வழங்கும். "சோழநாடு சோறுடைத்து" "நெல்லுடையான் நீர் நாடர்கோ" என்னும் பழமொழிகளைப் பெற்றது. இந்த நாட்டின் பெருமையை மகாவித்துவான் திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பின்வருமாறு போற்றுகிறார்.

**"பூவினுள் பதுமம்போலும் புருடருள் திருமால்போலும்**
**காவினுள் கற்பம்போலும் கலைகளுள் ஞானம்போலும்**
**ஆவினுள் சுரரான்போலும் அறத்துள் இல்லறமேபோலும்**
**காவினுள் மெய்க்காப்போலும் நாட்டினுள் சோழநாடு"**

இத்தகைய பெருமைகளையுடைய சோழநாட்டில், தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலுக்காவில் தென்னிந்திய இருப்புப் பாதையில் கும்பகோணம் ரயில் நிலையத்திலிருந்து வடமேற்கே 1-மைல் தூரத்தில் திருக்குடமூக்கு என்னும் தேவாரப் பெயர் பெற்ற ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரர் கோயில் உள்ளது. பிரளய காலத்தில் அமுதம் நிரம்பிய குடம் மிதந்து வந்தபோது சிவபெருமான் இவ்விடத்தில் கிராத (வேட) வடிவங்கொண்டு அம்பிட்டுக் குடத்தின் மூக்குவழியே அமுதத்தை நாலா பக்கங்களிலும் பரவச் செய்ததால் குடமூக்கு என்று பெயர் வந்ததாகக் கூறுவர். இது குடந்தை எனவும், கும்பகோணம் எனவும் வழங்குகிறது.



நடுக்கோபுரமும், துவஜஸ்தம்பமும்

# 3. கும்பகோணம்

சோழ நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் தஞ்சாவூர் ஜில்லாவில் கலைக் களஞ்சியமாக விளங்கும் கோயில்களைத் தன்னகத்தே கொண்டது கும்பகோணம். இந்த நகரம் ஏறக்குறைய நான்கு சதுரமைல் பரப்பையுடையது. இந்நகருக்கு வடபால் காவிரி நதியும், தென்பால் அரிசொல் நதியாகிய அரசலாறும் மாலை அணிந்ததுபோல் விளங்கும் நதிக்கரை நகரம், நாகரீகம் மிகுந்த இடம், கலைக்கும் இசைக்கும் இருப்பிடம், பல பெரியோர்கள் வாழ்ந்த இடம். தேவாரம் பெற்ற குடந்தைக் கீழ்க்கோட்டம், குடந்தைக் காரோணம் என்னும் சிவத்தலங்களும் உள்ளன. வேறு பல சிவன் கோயில்களும், வைணவக் கோயில்களும் உள்ளன. கும்பகோணம் ரயில்வே நிலையத்துக்குப் பக்கத்திலும், பிற இடங்களிலும் பல சத்திரங்கள் ஆங்காங்கு உள்ளன. தாலூகாவின் தலைமை ஸ்தலம். நகராட்சியில் நடைபெறுவது, சர்க்கார் சம்பந்தமான தாசில்தார் ஆபீஸ், சப்-மாஜிஸ்டிரேட் ஆபீஸ், போலீஸ் நிலையம், முன்சிப் கோர்ட் முதலிய அலுவலகங்கள் இருக்கின்றன. ஒரு காலத்தில் சோழர்களுக்குத் தலைநகரமாய் விளங்கியது. காவிரிக் கரையில் மிகவும் மனோகரமான காட்சிகளுக்கிடையில் மிகவும் கீர்த்தி வாய்ந்த கும்பகோணம் சர்க்கார் கலாசாலை அமைந்துள்ளது. இது "தென்னிந்திய கேம்பிரிட்ஜ்" என்று புகழப்படும். (The Cambridge of South India) இக் கலாசாலைக்குத் தலைவர்களாயிருந்தவர்களின் பெயர்களால் ஏற்பட்ட நினைவுச் சின்னங்கள் இருக்கின்றன. தலைவராயிருந்த போர்ட்டர் துரையின் பெயரில் (Porter Hall) போர்ட்டர் மண்டபம் உள்ளது. இது 1885-ல் கட்டப்பட்டு பொதுக் கூட்டங்களுக்கு உபயோகப்பட்டு வருகிறது. பக்கத்தில் தண்டலம் கோபால் ராவ் பெயரில் ஓர் நூல் நிலையம் உள்ளது. கும்பகோணம் காலேஜில் சாது சேஷய்யர், பூண்டி அரங்கநாத முதலியார், டாக்டர் உ. வே. சாமிநாதய்யர், தியாகராஜ செட்டியார் முதலிய பேரறிஞர்களும் தொண்டாற்றி வந்திருக்கிறார்கள். மேலும் ஆண்களுக்கெனப் பல

உயர்நிலைப் பள்ளிகளும் (High Schools). பெண்களுக்குத் தனிப் பள்ளிகளும், அரசினர் பெண்கள் கல்லூரியும் உள்ளன. பல மருத்துவசாலைகளும், மகப்பேறு நிலையமும் உள்ளன. மேலும்இந்நகரில் திருவாவடுதுறை,தருமபுரம்,திருப்பனந்தாள் ஆதீனங்களுக்குச் சொந்தமான கிளை மடங்களும், காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் மடமும், வீரசைவ மடமாகிய பெரிய மடம் என்று வழங்கப்படும் ஸ்ரீ சாரங்க தேவர் மடமும், பல அற்புதங்களைச் செய்த மௌனசுவாமிகள் மடமும், வைணவ மடங்களின் கிளை மடங்களும், திருவண்ணாமலை ஆதீன மடமும், மத்வர்களுக்குரிய வியாசராயர் மடமும் ஆங்காங்கு உள்ளன. தஞ்சை மன்னனுடைய ஆதரவால் ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள்மடம் ஏற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. பாபநாசம் முதலியார், சங்கராபரணம் நரசய்யா, சரபசாஸ்திரி முதலிய சங்கீத வித்வான்கள் வாழ்ந்த இடம். வட மொழியிலும், தர்க்கம், மீமாம்சம், வியாகரணம் முதலிய கலைகளிலும் வல்ல அறிஞர்கள் இருந்திருக்கிறார்கள். இவ்வூரில் வெள்ளி,பித்தளை, வெண்கலம்,ஈயம், எவர் சில்வர் முதலிய பாத்திர உற்பத்தி வியாபாரங்களும், பட்டு, நூல் முதலிய ஜவுளி வியாபாரமும், வாசனைப் பொருள்கள் முதலிய நறுமண வியாபாரமும் நடைபெறுகின்றன. வெளியூர்களுக்கு செல்லும் மோட்டார் வண்டிகள் நிலையம்—பேருந்து நிலையம் (Bus Stand) மகாமகக் குளத்து வடபுறம் உள்ளது. சென்னை மாகாணத்தில் ஜனத்தொகை மிகுந்த நகரங்களில் இந்நகரமும் ஒன்று. மகாமகப் பெருமைக்குரிய மகாமகக் குளம் நகருக்கு நடுநாயகமாக விளங்குகிறது. மகாமகப் பெருவிழாவை முன்னிட்டுக் குளமும், நகரமும் சுத்தம் செய்யப்பட்டன. இத்தகைய பழமையும், புதுமையும் வாய்ந்த நகரத்தில் திருக்குடமூக்கு என்னும் ஆதிகும்பேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது.

## 4. கோயிலின் அமைப்பு


நகரத்தின் நடுநாயகமாக கும்பேஸ்வரர் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலுக்கு முன்னே தூலலிங்கமாகிய 9 கண்களைக்கொண்ட கோபுரம் விளங்குகிறது. இதன் உயரம் 128 அடி. கோபுரத்துக்கு முன்னே இரு புறங்களிலும் கடைகள் உள்ளன. கோயிலுக்குள் மூன்று பிரகாரங்கள் உள்ளன.

கைலாச கோபுரத்தின் உட்பகுதியில் அமைந்துள்ள முதல் பிராகாரத்தில் கிழக்கு வரிசையில் அறுபத்து மூவர் உத்ஸவ மூர்த்திகளும், ஸ்தானீகர் அறையும், தெற்கு வரிசையில் சைவ சமயாச்சாரியர் நால்வர், அறுபத்துமூவர், சப்தகன்னியர் முதலியவர்களும், மேற்கு வரிசையில் விநாயகர், பிக்ஷாடனர், சுப்பிரமணியர், கார்த்திகேயர், லட்சுமி முதலிய சந்நிதிகளும், வடக்கு வரிசையில் பள்ளியறை, கட்டளை அறைகள், கிராதமூர்த்தி சந்நிதியும் உள்ளன. மண்டபத்துள், நடுவில் ஆதிகும்பேஸ்வரரும், தெற்கில் சோமாஸ்கந்த மூர்த்தியும், வடக்கில் மங்களாம்பிகையும் தனித் தனி மண்டபங்களில் எழுந்தருளியுள்ளார்கள். இரண்டாம் பிராகாரத்தில் தென்கிழக்கில் மடைப்பள்ளியும் வடகிழக்கில் யாகசாலையும்,ஸ்ரீலக்ஷ்மி நாராயணப் பெருமாள் சந்நிதியும் உள்ளன. பெரிய கோபுரத்துக்கு உட்பட்ட மூன்றும் பிராகாரத்தில் தென்மேற்கில் ஆதிவிநாயகரும், வடமேற்கில் சிவலிங்கமும், நடுவில் குமர கோட்டத்தில் தண்டபாணி மூர்த்தியும் எழுந்தருளியிருக்கிறார்கள். வடக்கில் திருக்கல்யாண மண்டபமும், யானைக்கூடமும், சட்டைநாதர் ஆலயமும், திருக்குளமும், தெற்கில் வன்னி மரமும், விநாயகர் கோயிலும், நந்தவனமும் உள்ளன. கல்யாண மண்டபத்தில் திருக்கல்யாண விழாவும், சமயச் சொற்பொழிவுகளும் நிகழும். இதில் தேவஸ்தானத்தின் அலுவலகம் (Office) உள்ளது. நான்காவது பிரகாரம் தேரோடும் வீதியாகும். தெற்கு வாயிலுக்குக் கோபுரமில்லை, மற்றைய மூன்றுக்கும் கோபுரங்கள் உண்டு. தலத்துக்குரிய மரம் வன்னி. கோயிலின் பரப்பு கிழமேலில் 750 அடி. தென்வடலில் 252 அடி. கோயிலின் அமைப்பைக் காட்டும் படம் தனியே உள்ளது.

## எண்களின் விளக்கம்:

1 முன்கோபுர வாயில். 9 கண்கள்
2 உள்கோபுர வாயில். 3 கண்கள்
3 விநாயகர்
4 தண்டாயுதபாணி
5 மடைப்பள்ளி
6 யாகசாலை
7 உள்வாயில்
8 அதிகாரநந்தி
9 அறுபத்துமூவர்
10 சப்தகன்னியர், அஷ்டலிங்கங்கள்
11 விநாயகர்
12 பிக்ஷாடனர்
13 முருகன் உற்சவர்
14 கார்த்திகேயர்
15 சிவலிங்கம்
16 லட்சுமி
17 பள்ளியறை
18 கட்டளை அறைகள்
19 கிராதமூர்த்தி
20 பைரவர், கோவிந்ததீக்ஷதர் முதலியோர்
21 மூலவர்
22 சோமாஸ்கந்தர்
23 நடராஜர்
24 அம்மன் சந்நிதி
25 வன்னிமரம்
26 கல்யாண மண்டபம் (அலுவலகம்)
27 யானைக்கூடம்
28 திருக்குளம்
29 பசுமடம்
30 பூந்தோட்டம்—நந்தவனம்.

## 5. கோயிலின் படம்



மேற்கு
தெற்கு
வடக்கு
கிழக்கு
1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25
26
27
28
29
30

## 6. மூர்த்திகளின் பெயர்கள்

இத்தலத்தின் விநாயகர் ஆதி விநாயகர் எனப் பெயர் பெறுவார். இறைவனும் இறைவியும் இத்தலத்துக்கு வருவதை அறிந்து விநாயகரும் இத்தலத்தை ஆதியில் அடைந்து மிகுந்த பக்தி உணர்ச்சியை உண்டாக்குவதால் ஆதிவிநாயகர் எனப் பெயர் பெற்ருர். மூலவருக்கு ஆதிகும்பேஸ்வரர், அமுதகும்பேசர் அமுதேசர் என்னும் திருப்பெயர்கள் வழங்குகின்றன. உலகிற்கு ஆதிகாரணராகிய பராபரம், கும்பத்தில் தோன்றியதால் ஆதி கும்பேஸ்வரர் என்றும், அமுத கும்பத்தில் தோன்றியதால் அமுத கும்பேசர் என்றும், நிறைந்த சுவையையுடைய அமுதத்தில் உதித்ததால் அமுதேசர் என்றும் பெயர்கள் வழங்கலாயின. திருஞானசம்பந்தர் தாம் பாடிய பதிகத்தில் குழகன் என்று காட்டுகிருர். அமுத கும்பத்தின் மூலமாக வேறு பற்பல லிங்கங்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்ததால் அந்தக் கும்பம், க்ஷேத்திர பீஜகும்பம் எனப்படும். தேவியாருக்கு மங்களநாயகி என்ற பெயர் அமைந்துள்ளது. தம்மை அன்போடு தொழுவார்க்குத் திவ்விய மங்களத்தை அருளும் மாட்சியால் மங்களநாயகி என்ற பெயரைப் பெற்ருர். சக்தி பீடங்களுள் ஒன்ருன மந்திர பீடத்தில் விளங்குவதால் மந்திர பீடேசுவரி என்றும், மந்திரபீட நலத்தள் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. மேலும் தம்மை வணங்குவோருடைய பல நோய்களையும் போக்கச் செய்வதால் 'பல நோயறுக்கும் பரை' என்ற பெயரும் வழங்கும். சிவபெருமான் வேட உருவத்தில் தோன்றி அமுதகும்பத்தை அம்பால் எய்தபோது கிராதமூர்த்தி என்ற பெயரைப் பெற்ருர். இவருடைய சிலையும் கோயிலில் உள்ளது.

# 7. பிற கோயில்கள்

பிரளய காலத்தில் மிதந்துவந்த அமுத கும்பத்தின் மூக்கின் வழியே அமுதம் பரவியதால் குடமூக்கு என்று சொல்லப்படும் கும்பேசுவரர் கோயில் ஏற்பட்டது. அமுத குடத்தை அலங்கரித்திருந்த பொருள்களான மாயிலை, தர்ப்பை, உறி, வில்வம், தேங்காய், பூணூல் முதலிய பொருள்கள் காற்றினல் சிதைக்கப்பட்டு, அவை விழுந்த இடங்களில் எல்லாம் தனித்தனி லிங்கங்களாய் காட்சி யளித்தன. அவை தனிக் கோயில்களாகவும் விளங்குகின்றன.

அவைகளில் கும்பகோணத்திலிருக்கும் கோயில்களாவன:

**நாகேஸ்வரர் கோயில்:** அமுத கும்பத்தின்மீது அணிந்திருந்த வில்வம் விழுந்த இடம். கும்பேசுவரர் கோயிலுக்குத் தென்கிழக்கில் உள்ளது, இதனுல் வில்வவனேசர் என்றும், நாகராஜனுகிய ஆதிசேடனுக்கு அருள் செய்ததால் நாகேஸ்வரர் என்றும், பாதாளத்தில் இருப்பதால் பாதாள லிங்கேசர் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. ஆண்டில் 3 நாட்கள் சூரியன் கிரணங்கள் மூலலிங்கத்தில் படிவதுண்டு. பாஸ்கர க்ஷேத்திரம் என்றும் சொல்லப்படும். அம்மன் பெயர் பெரிய நாயகி. தீர்த்தம் நாகதீர்த்தம்.

**சோமேசுவரர் கோயில்:** பொற்றாமரைக் குளத்திற்குக் கிழ்புறம் உள்ளது. அமுத கும்பத்திற்கு ஆதாரமாயிருந்த (சிக்கம்—உறி) தங்கிய இடம், இதனுல் சிக்கேசம் என்றும், பெருமானுக்குச் சிக்கேசர் என்றும் பெயர்கள் வழங்குகின்றன. சந்திரனுக்கு அருள் செய்ததால் சோமேசுவரர், ஏழைச்சோமநாதர் என்றும், தேவிக்குச் சோமசுந்தரி என்றும் பெயர்கள் அமைந்தன. வியாழன் வழிபட்டதால் வியாழச்சோமேசர் என்ற பெயரும் உள்ளது. சோமதீர்த்தம் என்னும் சந்திரபுட்கரிணித் தீர்த்தம் உள்ளது. இக்கோயிலில் நவராத்திரி விழா விசேஷமாய் நடைபெறும்.

**அபிமுகேசுவரர் கோயில் :** மகாமகக் குளத்தின் கீழ் கரையில் உள்ளது. அமுத கும்பத்தில் அணிந்திருந்த (நாளி கேரம்—தேங்காய்) விழுந்த இடம். இவ்விடத்தில் ஓர் சிவ லிங்கம் தோன்றியது. இதனுல் இத்தலத்திற்கு நாளிகே ரேசம் என்றும், பெருமானுக்கு நாளிகேரேசுவரர் என்ற பெயர்கள் வழங்குகின்றன. மகாமக தீர்த்தத்தில் நீராடுதற்கு வந்த கங்கை முதலிய நதி மடந்தையர் ஒன்பது பேருக்கும் பெருமான் அபிமுகமாக—மேற்கு முகமாக இருந்து காட்சி கொடுத்ததால் அபிமுகேசுவரர் என்ற பெயர் ஏற்பட்டது. தேவியார் அமிர்தவல்லி, குட்ட நோயால் வருந்திய பார்ப் பனிக்கும், ஊமையாயிருந்த ஓர் அரச குமாரனுக்கும் அருள் செய்து அவர்கள் நோயையும், ஊமைத் தன்மையையும் போக்கினுர்.

**கௌதமேஸ்வரர் கோயில் :** மகாமகக் குளத்தின் தென் மேற்கு மூலையில் உள்ளது, அமுத கும்பத்தில் அணிந்திருந்த பூணூல் விழுந்த இடத்தில் லிங்கம் தோன்றியதால் பெருமா னுக்கு யக்ஞோபவிதேசுவரர் என்ற பெயர் ஏற்பட்டது. கௌதம முனிவர்க்கு அருள் செய்ததால் கௌதமேஸ்வரர் எனப் பெயர் பெற்ருர். கௌதம தீர்த்தம் என்னும் திருக் குளம் உள்ளது. தேவியாரின் பெயர் சௌந்தரநாயகி என்பது.

**காசிவிசுவநாதர் கோயில் :** மகாமகக் குளத்தின் வட கரையில் உள்ளது. கங்கை முதலிய நவ கன்னிகைகளின் வேண்டுகோளுக்கிணங்கிப் பெருமான் காசியிலிருந்து அவர் களுடன் இங்குவந்து தங்கினுர். இத்தலத்தில் நவகன்னிகை களும் அமர்ந்துள்ளார்கள். இராமபிரான் இராவணனுதி யரைச் சங்காரம் செய்யும்பொருட்டு, இத்தலத்துக்கு வந்து பெருமானருளை வேண்டப் பெருமான் இராமனுடைய உடம்பில் ஆரோகணம் செய்ததால் பெருமானுக்கு காயா ரோகணர் என்றும் பெயர் ஏற்பட்டது. தேவியின் பெயர் காசி விசாலாட்சி என்பது.

**பாணபுரீசுவரர் கோயில்:** பிரளயத்தில் மிதந்து வந்த அமுத கும்பத்தைச் சிவபெருமான் வேட உருவத்துடன் நின்று அம்பு தொடுத்த இடம் பாணபுரேசம் என்னும் வாணுதுறை ஆகும். பாணம்—அம்பு தொடுத்த காரணத்தால் சுவாமிக்குப் பாணபுரீசுவரர் என்னும் பெயர் ஏற்பட்டது. வேட வடிவத்துடன் விளங்கும் கிராதமூர்த்தியின் சிலை கும்பேசுவரர் கோயிலில் உள்ளது. தேவியின் பெயர் சோம கலாம்பாள் என்பது. இத்தலத்தில் வியாசர், சூரசேனன் மனைவி காந்திமதி முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளார்கள்.

இவைகளை அல்லாமல் இந்நகரில் கைலாயநாதர் கோயில், கம்பட்ட விசுவநாதர் கோயில், காளத்தீஸ்வரர் கோயில், ஏகாம்பரேசுவரர் கோயில், விசுவநாதர் கோயில், பிரமன் கோயில், கரும்பாயிர விநாயகர் கோயில் முதலிய கோயில்களும் ஆங்காங்குள்ளன.

வைணவத் தலங்களாக இந்நகரில் உள்ளவை:

சாரங்கபாணிசுவாமி கோயில், சக்கரபாணி கோயில், வராகப்பெருமாள் கோயில், இராமசுவாமி கோயில், உடையவர் கோயில், திருமழிசையாழ்வார் கோயில் முதலியன. பாலையநல்லூரில் உள்ள மாரியம்மன் கோயில் சுற்றுக்கோயில்களில் ஒன்றாக உள்ளது.

**பஞ்சக்குரோசத் தலங்கள்:** அமுதம் நிறைந்த குடம் சிவபெருமான் திருவருளால் சிதைந்து அதிலுள்ள அமுதம் நாலா பக்கங்களிலும் பரவி ஐந்து குரோசம் வரையில் சென்று செழுமையாக்கியதால் பஞ்சக்குரோசத் தலங்கள் சிறப்புற்றன. அவை **திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம், திருத்தாரேசுவரம்** (தாராசுரம்) **திருவேரகம்**(சுவாமிமலை)**திருப்பாடலவனம்** என்னும் **கருப்பூர்** என்பன. ஒரு குரோசம் என்பது இரண்டரை நாழிகை வழி அளவுள்ள தூரம் என்பர். கும்பகோணத்துக்கு யாத்திரை செல்வோர் இந்த பஞ்சக்குரோசத் தலங்களுக்கும் சென்று விதிப்படி நீராடித் தரிசித்து ஒவ்வோர் பகல் தங்கி வழிபட்ட பிறகே கும்பகோணம் செல்லவேண்டும். வேதங்

களுக்கு அங்கமாகப் பல நூல்கள் அமைந்ததுபோலக் கும்ப கோணத்துக்கு அங்கமாக இந்த ஐந்து தலங்களும் அமைந்தன.

**“கற்றவர்புகழும் கும்பகோணத்தைக் கலந்து போற்றும்**
**பெற்றியரைங் குரோச யாத்திரை பேணல்வேண்டும்**
**உற்றவத் தலமோரைந்துள் ஒவ்வொன்று ளொருநாள்மேவிற்**
**பெற்ற புண்ணியம்பயக்கும் என்மனுர் புலமைசான்றோர்”**

—*திருக்குடந்தைப் புராணம்.*

மேலே காட்டியுள்ள கும்பகோண நகரில் உள்ள சிவத் தலங்களையும், வைணவத் தலங்களையும், பஞ்சக்குரோசத் தலங்களையும் ஒரு சேரத் தொகுத்துக் குடந்தைப் புராண ஆசிரியர் ஓர் அழகிய பாட்டில் காட்டியுள்ளார்.

**“இடைமருதர் முதலாவோ ரைவர்நா கேசர்நடம் இயற்றவல்லார்**
**கடையணுகாச் சோமேசர் காரோணர் அபிமுகர்நற் கவுதமேசர்**
**தடையிலருட் பாணபுரி யார்சுதரி சனர்சார்ங்க தரர்வராகர்**
**அடைவரத ரிவர்சூழ அமர்கும்ப லிங்கேசர் அடிகள்போற்றி”**

—*திருக்குடந்தைப் புராணம்.*

## 8. தீர்த்தங்கள்

—:*:—

**1. மகாமக தீர்த்தம்:** மகாமக விழாவிற்கு முக்கிய அங்கமாக—நகருக்கு நடுநாயகமாகக் கண்ணைக்கவரும் காட்சி களுடன் சுற்றிலும் பல மண்டபங்களைக் கொண்டு விளங்கும் திருக்குளமாகும். அமுத கும்பத்திலிருந்து வழிந்தோடிய அமுதத்தின் ஒரு பகுதி தென்கீழ் திசையில் வந்து தங்கியது, இவ்விடமே மகாமகத் தீர்த்தம். மேலும் கங்கை, யமுனை, கோதாவரி, நருமதை, சரஸ்வதி, காவேரி, குமரி, பயோடினி, சரயு முதலிய நதிகளின் தேவதைகளான நவகன்னியர்களும் தங்கள் நதிகளில் எண்ணிறந்த மக்கள் வந்து நீராடுவதால் தங்களுக்கு உண்டாகும் பாவத்தைப் போக்கிக் கொள்ளப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மகாமக நாளில்—குரு சிம்மராசியிலும், சந்திரன் கும்பராசியிலும் வரும் மாசி மகமாகிய பூரணை நாளில் கும்பகோணம் வந்து மகாமகக் குளத் தில் நீராடுவதாகச் சொல்லப்படுகிறது. அந்நாளில் கங்கை முதலிய நதிகள் மகாமகக் குளத்தில்வந்து சேர்வதாக ஐதீகம்.

"தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரஸ்வதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே"

—திருநாவுக்கரசர்.

"பூமருவும் கங்கைமுதல் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தான் ஆடுதற்கு வந்துவழி படுங்கோயில்"

—பெரிய புராணம்.

"The sacred Mahamaham Tank a fine-revetted reservoir surrounded with Picturesque mantapams is the centre of the very important Mahamaham festival, in honour of Kumbeswaraswami. This takes place every thirteenth year, and people flock to it from every part of South India, and from even greater distances. It is believed that the tank receives a supply of water direct from the Ganges at this." (T. D. G.)

"பரிசித்தோர் பவப்பற்ற றுங்கங்கைநீர்
உருசித்தோருக் குயர்பத மொன்றுமே
வரிசைப்பார்புகழ் மகாமகக் கங்கையைத்
தெரிசித்தோர்க்குச் செனனம தில்லையே"

"உமையொரு பாகங்கொண்ட உத்தமன் சொரூபமேய
அமைதர நெடுந்தூரத்தே அமர்ந்துளத் தெண்ணினும்
இமைநொடி யளவிற்பாவம் அனைத்தையும் இரிப்பதாய
கமைதரு மகதீர்த்தம்போல் புவனத்துள் காண்பதின்றே"

—திருக்குடந்தைப் புராணம்.

இதற்கு அமுதவாவி, அமுத தீர்த்தம், கன்னியர் தீர்த்தம், பாவநாசத் தீர்த்தம் முதலிய பெயர்களும் உண்டு. தற்காலத்தில் மாமாங்கக்குளம் என்று சொல்லப்படுகிறது. இதில் ஸ்ரீராமர், சண்டி, ஏமவாகுவின்மனைவி சுலோசனை முதலியோர் நீராடிப் பேறு பெற்றுள்ளார்கள். பௌர்ணமியோடு கூடிய மகநாளில் இத்தீர்த்தத்தில் ஒருவன் நீராடி வழிபட்டால் தன் குலம், மருகன் குலம், பாட்டன் குலம், சிற்றன்னையின் குலம், உடன்பிறந்தாள் குலம், சிற்றப்பன், பெரியப்பன் குலம், மாமன் குலம் முதலிய ஏழு குலத்தார்க்கும் புண்ணியமுண்டு என்று புராணம் கூறுகிறது. இதை அனுசரித்து

பிற்காலத்தில் நாட்டின் பல்வேறிடங்களிலும் உள்ள மக்கள் தெய்வ நம்பிக்கை கொண்டு, இத்தலத்திற்கு வந்து தீர்த்தங்களில் நீராடிப் பெருமானை வழிபட்டுச் செல்கின்றனர். மாசி மாதத்தில் ஆதிகும்பேஸ்வரருக்கு நடைபெறும் பெருவிழாவில் 10-வது நாளாகிய மக நாளில் பெருமான் பஞ்சமூர்த்திகளுடன் புறப்பட்டு, இக்குளத்திற்கு வந்து தீர்த்தங்கொடுக்கும். பங்குனி மாதத்தில் தெப்பத் திருவிழா நடைபெறும். ஸ்ரீ நாகேஸ்வரர் கோயில் மூர்த்தியும் இக் குளத்திலுள்ள ஓர் மண்டபத்தில் வந்து தங்கித் தீர்த்தங் கொடுப்பதுண்டு.

இதில் நீராடுவதற்குரிய புண்ணிய காலங்களாவன:—

அமாவாசை, பௌர்ணமி, மாதப்பிறப்பு, இரண்டு அயன காலங்கள், சுக்கிரவாரம், மகாவிதிபாதம், கார்த்திகை, சிவராத்திரி முதலிய விசேட நாட்களாகும்.

இக் குளத்தைச் சுற்றிலும் 16 மண்டபங்கள் உள்ளன. இவை சோடசலிங்க மண்டபங்கள் எனப்படும். தஞ்சாவூரை அரசாண்ட அச்சுதப்ப நாயக்கரிடம் மந்திரியா யிருந்த கோவிந்த தீக்ஷிதர் என்பவர் (கி. பி. 1542-ல்) அரசனுடைய ஆதரவால் இந்தப் பதினாறு மண்டபங்களையும் கட்டுவித்ததாகச் சொல்லப்படுகிறது. மேலும் இவர் திருவையாறு, கும்பகோணம், திருவிடைமருதூர், திருவலஞ்சுழி என்னும் இடங்களில் புஷ்ய மண்டபங்களைக் கட்டுவித்ததாகவும் கூறுவர். இவருடைய சிலையும், இவருடைய மனைவியின் சிலையும் கும்பேசுவரர் கோயிலில் உள்ளன. பதினாறு மண்டபங்களில் உள்ள மூர்த்திகளின் பெயர்களாவன: பிரமதீர்த்தேசுவரர், முகுந்தேசுவரர், தனேஸ்வரர், விருஷபேஸ்வரர். பரணேஸ்வரர், கோணேஸ்வரர், பக்திகேசுவரர், பயிரவேஸ்வரர், அகத்தீஸ்வரர், வியாசேஸ்வரர், உமைபாகேஸ்வரர். நைருதீஸ்வரர், பிரம்மேஸ்வரர், கங்காதரேஸ்வரர், முக்ததீர்த்தேஸ்வரர், க்ஷேத்திரபாலேஸ்வரர் முதலியோராவர். இந்த பதினாறு மண்டபங்களில் வடகரையில் முதலாவதாயுள்ள பிரம்மதீர்த்தேசுவர மண்டபத்தில் துலாபாரச்சித்திரம் உள்ளது, இதனால் இதற்குத் துலாபார மண்டபம் என்றும் பெயர். அச்சுதப்ப நாயக்கர் துலையின்—தராசின் ஓர் தட்டில்

நின்றுகொண்டு, மற்றொரு தட்டில் பொன்னை நிறுத்துக் கொடுத்தாராம். அந்தப்பொருளைக்கொண்டு கோவிந்ததீக்ஷதர் விஷ்ணுத் தலங்களைக் கட்டுவித்ததாகச் சொல்லப்படுகிறது.

மகாமகக் குளத்தில் உள்ள பல தீர்த்தங்களாவன:—

பிரம தீர்த்தம்–1, திக்குப்பாலகர்களின் தீர்த்தம்–8, நதிமடந்தையர்களின் தீர்த்தம்–9, தேவராதியோர் அறுபத்தாறு கோடி தீர்த்தம்.


அவைகளின் விவரம் பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1, | இந்திர தீர்த்தம் | 10. | கங்கை |
| 2. | அக்னி தீர்த்தம் | 11. | யமுனை |
| 3. | யம தீர்த்தம் | 12. | கோதாவரி |
| 4. | நிருதி தீர்த்தம் | 13. | நருமதை |
| 5. | வருண தீர்த்தம் | 14. | சரஸ்வதி |
| 6. | வாயு தீர்த்தம் | 15. | காவிரி |
| 7. | குபேர தீர்த்தம் | 16. | குமரி |
| 8. | ஈசான தீர்த்தம் | 17. | பயோடினி |
| 9. | பிரம தீர்த்தம் | 18. | சரயு |

19. அறுபத்தாறுகோடி தீர்த்தம்

இத்தனை தீர்த்தங்களும் அமைந்த மகாமகக்குளத்தில் மாசிமக நாளில் நீராடிக் கும்பேசுவரர் முதலிய மூர்த்திகளை வழிபட்டால் பற்பல பேறுகளைப் பெற்று இம்மையிலும், மறுமையிலும் இன்பம் அடைவர். இத்தகைய பெருமைகளையுடைய மகாமகக் குளத்தின் அமைப்பைக் காட்டும் படம் எதிரே உள்ளது.

**2. காசிப தீர்த்தம் :** காசிப முனிவர் இத்தலத்திற்கு வந்து காவிரித்துறையில் நீராடிக் கும்பேசுவரரை வழிபட்டார். அவர் நீராடிய இடம் காசிப தீர்த்தம் எனப்படும். திருவிழா நாட்களில் கும்பேசுவரர் இவ்விடத்திற்கு வந்து தீர்த்தம் கொடுப்பதுண்டு. இதனால் திருமஞ்சனப் படித்துறை எனவும் பெயர் பெறும்.



மகாமகக்குளத் தீர்த்த விபரம்

**3. காமதேனு தீர்த்தம் :** கும்பேசுவரர் கோயிலுக்கு வடக்கில் காமதேனு என்னும் தேவப்பசு ஓர் தீர்த்தமுண்டாக்கிப் பெருமானைப் பூசித்து வழிபட்டது. அது காமதேனு தீர்த்தம் எனப்படும்.

**4. கந்த கூபம் :** முருகப்பெருமான் சூரபத்மன் முதலியோருடன் போர்செய்து வெற்றிபெற, இக்கோயிலின் வடகிழக்கில் ஓர் தீர்த்தங்கண்டு அதைக்கொண்டு பெருமானைப் பூசித்து வழிபட்டார். இதனால் கந்தகூபம் எனப் பெயர் பெற்றது. மங்கள கூபம், மங்கள சிவகங்கை எனவும் பெயர் பெறும். தற்போது திருக்குளம் என வழங்குகிறது,

இவைகளையல்லாமல் இந்த நகரிலுள்ள மற்ற கோயில்களுக்குரிய பலவேறு தீர்த்தங்களும் ஆங்காங்கு அமைந்து உள்ளன.

"அத்தன் இறைவன் அமலேசன் அமராலயத்தின் அருகுறுநீர்
சுத்தம சுத்தமாயினு நற்சுரர்கள் பரவுகங்கை யென்றே
புத்திபுரிந் தங்கத்தடத்தின் புனலுள் படிவோர் யாரேனும்
சத்தசனனத் துறுபாவம் தணந்து சிறந்து தயங்குவரே"

சிவபுண்ணியத்தெளிவு

## 9. தலப்பெருமைகள்

"குடமூக்கே குடமூக்கே என்பீராகில்
கொடுவினைகள் தீர்ந்தரனைக் குறுகலாமே" —அப்பர்.

குடமூக்காகிய கும்பகோணத்தை—கோயில்கள் நிறைந்த குடந்தையின் திருப்பெயரைக் கூறக் கொடிய தீவினைகள் யாவும் நீங்கும் என்று திருநாவுக்கரசர் காட்டுகிறார். இத் தலம், மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றிலும் சிறப்புடையது. சோழவள நாட்டில் தேவாரத் திருப்பதிகம் பெற்ற தலங்க

ளுள் மேம்பட்டு விளங்குவன சில. அவை அண்ணுமலை, காசி, காளத்தி, கேதாரம், ஆரூர், வலஞ்சுழி, ஏரகம், தில்லை, வெண்காடு, இடைமருது, குடந்தை என்னும் திருத் தலங்களாம், இவைகளுள் ஊழிக்காலத்தும் அழியாது விளங்குவது திருக்குடமூக்கு என்னும் தலமாகும். இது காவிரி, அரிசில் என்னும் இரண்டு நதிகளுக்கு நடுவில் உள்ளது. இவ்விரு நதிகளும் குடந்தை நகருக்கு மாலை அணிந்ததுபோல் விளங்கும். குடந்தை கீழ்க்கோட்டம், குடந்தைக் காரோணம் என்னும் தேவாரத் தலங்களைக் கொண்டது. வேறு பல சிவத் தலங்களையும், சாரங்கபாணிகோயில், சக்கரபாணிகோயில், இராமசாமிகோயில் முதலிய விஷ்ணுத் தலங்களையும் உடையது. பிரம சிருஷ்டிக்குக் காரணமாகிய பீஜம் தங்கப்பெற்றது. பிரளய காலத்தில் மிதந்துவந்த அமுதம் நிரம்பிய குடத்தைச் சிவபெருமான் வேட வடிவங்கொண்டு அம்பிட்டுக் குடத்தின் மூக்கு வழியே அமுதத்தை நாலா பக்கங்களிலும் பரவச்செய்த இடம். அமுத குடத்தை அலங்கரித்திருந்த மாவிலை, தர்ப்பை, உறி, வில்வம், தேங்காய், பூணூல் முதலியவை விழுந்த இடங்கள் தனித்தனிக் கோயில்களாக விளங்கும். அமுத கும்பத்திலிருந்த அமுதம் நாலாபக்கங்களிலும் பரவி ஐந்து குரோசம் வரையில் சென்று செழுமையாக்கிய பஞ்சக்குரோசத் தலங்கள் தன்னைச் சூழ்ந்ததாக உடையது. திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் பாடிய தேவாரப்பதிகங்களும், அருணகிரியார் பாடிய திருப்புகழும், பிற்காலத்தில் மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய திருக்குடந்தைப் புராணமும், வேறு பிரபந்தங்களும் அமையப் பெற்றது, திருமால் பூசித்துச் சக்கரமும், சாரங்கமும் பெற்றது. அறுபத்துமூன்று நாயன்மார்களுள் மூர்த்தி நாயனுர் வழிபாடுசெய்து முக்தி பெற்றது. மாநிலத்தார் எல்லோரும் போற்றக்கூடியதும், மூழ்கினேரது பாவங்களைப் போக்கக்கூடிய கங்கா முதலிய நவநதிகளும் வந்து மூழ்கித் தங்கள் பாவங்களைப் போக்கிக் கொண்ட பெருமை யுடையதும், நினைத்தாலுங்கூடப் பாவங்கள் அனைத்தையும் போக்கக் கூடியதுமாகிய மகாமகத் தீர்த்தத்தை நடுநாயகமாக உடையது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குரு சிம்மராசியிலும், சூரியன் கும்பராசியிலும், சந்திரன் குருவோடும் கலக்கும் மாசி மாதப் பௌர்

ணமி நாளாகிய மகாமகப் பெருவிழாவைக் கொண்டது. காவிரி நதி குமாரதாரை என்னும் பெயருடன் ஓடி வருவது. சக்தி பீடமான மந்திர பீடத்தைப் பெற்றது. புராணப் பெருமையின்படி சண்டி, கிருதவன்மன், சுதன்மன், வீர வன்மன், சுலோசனை, காசிபன், ஞானவான் சுவர்ணரோமன், கருமசன்மன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர். நான்முகன், இந்திரன் முதலியோர் பூசித்துப் பேறு பெற்ருர்கள். பகவர் என்னும் முனிவர் தவம்புரிந்து முக்தி பெற்ருர். இவர் பெயரால் காவிரியில் பகவர் படித்துறை என்று ஒரு படித்துறை விளங்கும். சமய தலைவர்களும், அறிஞர் பலரும், சங்கீத வித்வான்களும், பிறரும் வாழ்ந்த இடம். ஆதிகும்பேஸ்வரர் தேவியுடன் பல்லக்கில் எழுந்தருளி ஏழு தலங்களுக்குச் சென்று வலம் வருதலாகிய சப்தஸ்தான விழாவையுடையது. சென்ற இடங்களில் எல்லாம் திருக் கோயில்களும், தீர்த்தங்களும் நிறைந்த இடம். பல சிற்பங் களையும், கல் வெட்டுகளையும் உடையது. திருஞானசம்பந்தர் தாம் பாடிய தேவாரப் பதிகத்தில் குடமூக்காகிய கும்ப கோணத்தின் பெருமையை பலபடியாக வர்ணித்துக் காட்டு கிருர்.

காவிரிக் கரையின் சோலைகளில் மணம்மிக்க மல்லிகை, குரவம் முதலிய மலர்களில் தேன் ததும்பும் நல்ல நடனங்க ளின் ஒலி ஆங்காங்கு இடைவிடாமல் ஒலித்துக்கொண் டிருக்கும். மயிற் பேடைகள் ஆடவும், மணல்களில் அன்னங் கள் வந்து தங்கவும், வண்டுகள் பண்ணிசைக்கவும், குயில்கள் பாடவும் தக்கதான சோலைகளையுடையது. பலவிதமான கொடிகள் அசையும்படியான நீண்ட மாடங்களையுடைய பதி. மாங்கனிகளும், பலாக்கனிகளும் சோலைகளில் செழித்து விளங் கும். சோலைகளில் குலையோடு கூடிய பலாக்கனிகளும், மடல் களில் தங்கிய தெங்குகளும் ஆங்காங்கு கீழே விழுந்து கிடக் கும். இத்தகைய சிறப்புகளைத் திருஞானசம்பந்தர் தமது பாடல்களில் பற்பல தொடர் மொழிகளில் அமைத்துக் காட்டுகிருர்.

அவை வருமாறு:

"மணமல்லிகை கள்ளவிழும் குரவிரிசோலை
சூழ்ந்தகுழகன் குடமூக்கு, நல்லகூத்தரவங்கள்
ஓவாக்குடமூக்கு மயில்பெடை புல்கியால
மணல்மேல் மட அன்னம் மல்கும்பயில்பெடை
வண்டுபண் செய்யும் பழங்காவிரிப்பைம்
பொழில்வாய்க் குயில்பெடை யொடுபாடல்
உடையான் குடமூக்கு. கொடிநெடுமாட
மோங்குங் குழகன்குடமூக்கு மாவினை நல்ல
பலவின்கனிகள் தயங்கும் குழைவளர்சோலை
சூழ்ந்தகுடமூக்கு குலைமலிதண் பலவின்பழம்
வீழ்குடமூக்கு கொடுமடல்தங்கு தெங்குபழம்
வீழ்குடமூக்கு" முதலியன.

கும்பகோணத்தின் பிற்காலப் பெருமைகள், கும்பகோணம் என்ற தலைப்பில் தனியே காட்டப்பெற்றுள்ளன. இன்னோரன்ன காரணங்களாலும், பிறவற்றாலும், இம்பரும், உம்பரும் புகழ்ந்து பாராட்டக்கூடிய குடமூக்கென்னும் கும்பகோணத் தலம் பழமையிலும், புதுமையிலும் சிறப்புற்று விளங்குகிறது.

## 10. திருப்பணிகள்

முன்னோர்கள் ஏற்படுத்திய பல பெருமைகளையுடைய கோயில்களுக்கு எவ்விதத் தீங்கும் நேராதபடி அவ்வப்போது ஆவன செய்யவேண்டும். புதியதோர் ஆலயத்தை அமைப்பதைப் பார்க்கிலும், பழமையான கோயிலைப் புதுப்பித்தல் மிகவும் புண்ணியத்தைத் தரும் என்பர்.

"மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமா மிலிங்கமாதி நளினபுட் கரணியாதி
சேதமுற்றிடின் முன்போல் செய்பவர்க்குறு பலன்தான்
ஓதுமுன் செய்தோர்தம்மில் ஆயிரங்குணித மோங்கும்"

—சிவபுண்ணியத் தெளிவு.

மேலும், கோயில்களில் பூஜை முதலியன நடைபெறாமல் முட்டுப்பாடு ஏற்பட்டால் நாட்டுக்குத் தீங்கு உண்டாகும் என்பர்

"முன்னவனூர் கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்,
கன்னங் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத்தானே"

என்று திருமூலர் கூறுகிறார். எனவே இக்கோயிலில் சில திருப்பணிகள் அவ்வப்போது நடைபெற்றுள்ளன. ஆதியில் ஒரு சோழன் இக்கோயிலின் திருப்பணிகளைச் செய்து, வேறு பல கோயில்களை எடுப்பித்தான் என்றும், அவன் திருப்பணிச் சோழன் என்று பெயர் பெற்றான் என்றும் அறிகிறோம். கல்வெட்டுகளின்படி காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் பல திருப்பணிகளைச் செய்திருப்பதாகத் தெரிகிறது. சுமார் 90 ஆண்டுகளுக்குமுன் கோயில் நிர்வாகத்தைக் கவனித்துவந்த, சைவத் திருவாளர் கோபு—நடராஜச் செட்டியார் அவர்கள் வெளி விநாயகர் கோயில் தொடங்கிக் கீழவீதி வரையில் உள்ள நடக்காவணக்கல் மண்டபத்தை அமைத்து 2, 3-வது பிராகாரங்களில் செங்கல் தளவரிசையும் போடுவித்தனர். பல வெள்ளி வாகனங்களும், நகைகளும் அவர்கள் காலத்தில் செய்விக்கப் பெற்றன. பிறகு 1810-ல் கோயில் தர்மகர்த்தர்களுடைய பெருமுயற்சியால் பல திருப்பணிகள் செய்யப்பெற்றுக் கும்பாபிஷேகம் நிறைவேறியது. பிறகு 1938-ல் அப்போதிருந்த ஆலய நிர்வாகிகளின் நல்முயற்சியால் பல திருப்பணிகள் நடைபெற்று, இராசகோபுரத்தின் உட்பகுதி நன்கு புதுப்பிக்கப் பெற்றது. திருவாவடுதுறை ஆதீனத்து 20-வது மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக சுவாமிகள் மேற்பார்வையில் 7-5-42-ல் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. மேலும் பல முக்கிய திருப்பணிகள் செய்யப்பட்டு 12—2—1959ல் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கின்றது.

## 11. சிற்பங்கள்

—:*:—

முன்னே தோன்றும் இராசகோபுரம் 9 கண்களைக் கொண்டு அதில் பல சிற்பங்கள் காணப்படுகின்றன. உள் மண்டபத்திலும் அம்மன் மண்டபத்திலும் உள்ள தூண்களில் சிறந்த வேலைப்பாடுள்ள உருவங்கள் உள்ளன. நவராத்திரி மண்டபத்தின் மேல் இடத்தில் 27 நட்சத்திரங்களுடன் 12 ராசிகளும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. சுவாமி, அம்மன் சந்நிதிகள் உயர்ந்த மேடை அமைப்பில் உள்ளன. நந்தியின் முகம் சாய்வாக அமைக்கப் பெற்றுள்ளது. கிராத மூர்த்தியின் சிலையும், நடராஜமூர்த்தியின் உற்சவரும் அழகாக உள்ளன. அம்மன் சந்நிதி மண்டபத்தில் பள்ளியறைக்கு எதிரில் மேல்விட்டத்தில் ஆதிகும்பேஸ்வரரின் வரலாற்றுச் சிற்பங்கள் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயில் முருகப் பெருமானுக்கு ஆறு முகங்களும், தனிச் சிறப்பாக ஆறு திருக்கரங்களும் உள்ளன. வலது திருக்கரம் மூன்றில் வேலாயுதம், வாள், அபயம் உள்ளன. இடது திருக்கரங்கள் மூன்றில் வச்சிராயுதம், கேடகம், வரதம் உள்ளன. கோயிலில் கண்டெடுத்த இரண்டு கல் நாதசுர வாத்தியங்கள் உள்ளன. குடந்தைச் சிவனடியார் கூட்டம் 8-வது ஆண்டு நிறைவின் நினைவாக உள் கோபுர வாயிலில் சுவரில் பெரிய புராணப் பாடலும், திருத்தாண்டகப் பாடலும் பொறிக்கப்பெற்ற சலவைக் கற்கள் 31—12—55-ல் நாட்டப் பெற்றுள்ளன.

## 12. வருமானமும், சொத்துக்களும்

இக்கோயிலுக்கு 199 ஏகர், 93 செண்ட் நன்செய் நிலங்களும், 40 ஏகர், 79 செண்ட் புன்செய் நிலங்களும் உள்ளன. இவைகள் வில்வராயநல்லூர், கோவில்பத்து, ஆதிச்சமங்கலம், வேதாம்பரை, அஷ்டமங்கலம், வலங்கிமான், சின்னகரம், மடப்புரம், எடக்கியம், பாளையநல்லூர் முதலிய கிராமங்களில் உள்ளன. ஆண்டுதோறும் சுமார் ரூபாய் எண்பத்தையாயிரம் மொத்த வருமானம் வரும்.

அவற்றின் விவரம் ஏறக்குறைய

| | | |
|---|---|---|
| ரொக்கக் குத்தகை | ரூ. | 4000—00 |
| நெல் வருமானம் | ரூ. | 40000—00 |
| கட்டிட வாடகை மனைப்பகுதி அடிக்கடை முதலியன | ரூ. | 30000—00 |
| உண்டியல் வருமானம் | ரூ. | 3000—00 |
| இதர வருமானம் | ரூ. | 8000—00 |
| கூடுதல் | ரூ. | 85000—00 |

மேலும் அரசியலார் மோகினித் தொகையாக ஆண்டுதோறும் ரூ. 1989—10 கொடுக்கிறார்கள். இக்கோயிலுக்குச் சுமார் இரண்டு லட்ச ரூபாய் மதிப்புள்ள தங்கம், கல் நகைகளும், வெள்ளி வாகனங்கள் முதலியவைகளும் இருக்கின்றன.

## 13. நிர்வாகம்

இக் கோயிலின் நிர்வாகம் ஆதியில் தேவஸ்தானக் கமிட்டியின் மேற்பார்வையில் இருந்து வந்தது. பிறகு 1938-ல் ஏற்பட்ட (Scheme) திட்டப்படியும், (B. O. 1113-31—5—1938). பிறகு 1947-லும், 1957-லும் ஏற்பட்ட திருத்தப்பட்ட திட்டங்களின்படியும் (Modified Schemes) B. O 1277/25—4—1947 O. A. No. 141/11—5-1957-படியும் சென்னை அறநிலையப் பாதுகாப்பு இலாகாவின் (Hindu Religious and Charitable Endowments) நேர் நிர்வாகத்தில் இருந்து வருகிறது. ஷை இந்த இந்து சமய அறநிலைய பாதுகாப்புத் துறையினரால் நியமிக்கப்பெற்ற நிர்வாக அதிகாரியும், தர்மகர்த்தர்களாகிய அறங்காவலர்களும் கோயில் காரியங்களைக் கவனித்து வருகிறார்கள்.

## 14. கல் வெட்டுக்கள்

இக்கோயிலில் சாலிவாகன சகாப்தம் 1722-ல் ஏற்பட்ட இரண்டு கல்வெட்டுக்களும், மற்றோர் கல்வெட்டும் உள்ளன.


1. சாலிவாகன சகாப்தம் (1722) ரௌத்திரி-ஸூ ஸ்ரீ ஆசார்யஸ்வாமிபி: நிர்மித: ஸ்ரீ காஞ்சி பீடாபிஷித்த ஸ்ரீ மஹாதேவேந்த்ரயதி உபயம்."
இக்கல்வெட்டு துவஜஸ்தம்பத்துக்குத் தென்புறம் உள்ள தூணில் உள்ளது. ஷை துவஜஸ்தம்பத்துக்கு வடபுறம் உள்ள தூணில் ஷை கல்வெட்டின் செய்திகள், தெலுங்கு மொழியிலும் வெட்டப்பட்டுள்ளன.

2. "சாலிவாகன சகாப்தம் (1722) துன்மதி-ஸூ கும்பேஸ்வர சுவாமி சோமாஸ்கந்த மூர்த்திக்கு கர்ப்பக்கிருகம் அர்த்த மண்டபம், மகா மண்டபம், மூடுன்னு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி சந்திர மௌளீஸ்வர தாஸபூத ஸ்ரீமகா தேவந்த்ரயதி தர்மம்."
இது சோமாஸ்கந்தமூர்த்தி கோயிலுள் அர்த்தமண்டபத்துத் தென்புறத்தில் உள்ளது.

3, "—விக்கிரம-ஸூ ஆடிமீ 21வ செவ்வப்ப நாயக்க ஐயன் தர்மமாக திருவிலந்துறை புத்தர் கோயிலில் சித்தமார மர்ந்தார் நாயகர் நிலத்திலே திருமலை கோபுரப் பிரகாரங்கள் விசேஷ மகா ஜனங்கள் வாக்காலே வேண்டிக்கொள்ள திருப்பணி முடிந்தது."
இது கைலாச கோபுர வாயிலின் தென்புறம் உள்ளது. மேலும் கிராதமூர்த்திக் கோயிலின் நிலைக் கல்லிலும், பெரிய நந்தியுள்ள இடத்துக்குத் தென்புறம் உள்ள அறைக் கதவுகளின் மூலைக் கல்லிலும் சிதைந்த கல் வெட்டுக்கள் உள்ளன. (இக் கல் வெட்டுகள் முன் பதிப்பில் கண்டபடியே காட்டப் பெற்றுள்ளன.)

## 15. தினப் பூஜையும், திருவிழாக்களும்

இக் கோயிலில் தினந்தோறும் ஆறு காலங்களில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்து வருகின்றன. உஷக்காலம் காலை 7 மணிக்கும், காலைசந்தி 9 மணிக்கும், உச்சிக் காலம் பகல் 12 மணிக்கும், மாலைப் பூஜை 5 மணிக்கும், இரண்டாங் காலம் இரவு 8 மணிக்கும், அர்த்தஜாமம் இரவு 9½ மணிக்கும்



கோயில் இரண்டாம் பிரகாரம் தெற்குப்பக்கம்

பூஜை வழிபாடுகள் நடைபெறுகின்றன. அந்தந்த நேரங்களில் சென்று தெரிசித்தால் மிகவும் புண்ணியமுண்டு.

"காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்—மாலையினில்
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்
வெந்துயர மெல்லாம் விடும்."

— சிவதரிசனமகத்துவம்.

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப்பொலிவு கண்டார்தல்."

என்னும் பெரியபுராணப் பாடலின்படி மனிதராய்ப் பிறந்தவர் அனைவரும் தாம் எடுத்த தேகம் விழுமின், பெருமானுக்கு நடைபெறும் திருவிழாக்களைக்கண்டு தரிசித்து அருளுக்குப் பாத்திரம் ஆகும்படி ஒழுகுதல் நலமாகும்.

ஆண்டுதோறும் மாசி மாதத்தில் மாசிமகப் பெருவிழா பத்து நாட்கள் வரையில் நடைபெறும். அசுவதி நட்சத்திரம் கூடிய முதல் நாளில் கொடியேற்றமும், எட்டாவது நாளில் வெண்ணைத்தாழியும், ஒன்பதாம் நாளில் தேர் ஓட்டமும், பத்தாம் நாளில், மகம்கூடிய பூரணை நன்னாளில் பஞ்சமூர்த்திகளும், மூஷிகம், மயில், ரிஷபம் முதலிய வாகனங்களில் புறப்பட்டு மகாமகக்குளத்திற்குச் சென்று தீர்த்தங்கொடுக்கும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குரு சிங்க ராசியிலும் சந்திரன் கும்பராசியிலும் வரும் மாசிமகப் பூரணை நாளில் நிகழும் **மகாமகப் பெருவிழாவும்** இக்கோயிலின் சார்பில் நடைபெறும் திருவிழாவாகும். இந்நாளில் கங்கை முதலிய 9 நதிகளும் மகாமகக் குளத்தில் வந்து நீராடித் தம் பாவங்களைப் போக்கிக்கொள்ளும். நாட்டின் பல இடங்களிலுள்ள மக்களும் மகாமகக்குளத்தில் நீராடிப் பாவங்களைப்போக்குவர். மேலும் பங்குனி மாதத்தில் மகாமகக்குளத்தில் தெப்பத்திருவிழாவும், சித்திரை மாதத்தில் சப்தஸ்தான விழாவும் நடைபெறும். அன்றைக்கு ஆதி கும்பேஸ்வரர் மங்கள நாயகியுடன் அதிவிநோதமாய் அலங்கரிக்கப்பெற்ற பல்லக்கில் அமர்ந்து

சாக்கோட்டை, திருக்கலயநல்லூர், தாராசுரம், திருவலஞ்சுழி சுவாமிமலை, கொட்டையூர், மேலக்காவேரி முதலிய ஏழு ஸ்தலங்களுக்கு எழுந்தருளிக் காட்சி கொடுத்துத் திரும்புவர், வைகாசி மாதத்தில் ஸ்ரீ மங்களாம்பிகைக்கும், ஸ்ரீகும்பேசுவரருக்கும் திருக்கல்யாணம் நடைபெறும். மேலும், அந்தந்த மாதங்களிலும் விழாக்கள் நிகழும். ஆனித்திருமஞ்சனம் தக்ஷிணாயனம், பதினெட்டாம்பெருக்கு, ஆடிப்பூரம், பவித்திர விழா, ஆவணிமூலம், விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்தர்சஷ்டி, கடைமுகம், கார்த்திகை சோமவாரம், கார்த்திகைத் தீபம், மார்கழித் திருவாதிரை, மகாவிதிபாதம், சங்கராந்தி, சிவராத்திரி, அமுதுபடையல் முதலிய விழாக்கள் அந்தந்தக் காலங்களில் நடைபெறும். பிரதோஷம், கார்த்திகை வெள்ளிக்கிழமை, அமாவாசை, திருவாதிரை முதலிய பஞ்ச பருவ விழாக்களும் அவ்வப்போது நடைபெறும்.

பல கோயில்களுக்கு நடுவில் விளங்கும் ஆதிகும்பேஸ்வரப் பெருமான், பல திருவிழாக்களுக்கும் இடையில் இருந்து அடியார்களுக்கு அருள் செய்து வருகின்றார்.

---

## 16. மகாமகப் பெருவிழா

கும்பகோணத்தை நினைக்கும்போதே மகாமகப் பெருவிழாவும், அதற்கு ஆதாரமான மகாமகக் குளமும் முன்னிற்கும். நகரில் விளங்கும் கோயில்களில் சிறப்புற்று விளங்கும் ஆதிகும்பேஸ்வரர் கோயிலின் சார்பில் நடைபெறும் திருவிழாக்களில் **மகாமக விழா** மிகவும் சிறப்புற்றது. ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு நட்சத்திரம் சிறந்ததுபோல, மாசியில் விளங்குவது மக நட்சத்திரம். ஆண்டுதோறும் மாசியில் வருவது மகவிழா. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குரு சிங்கராசியிலும், சந்திரன் கும்ப ராசியிலும் வரும் மாசி மகம் கூடிய பூரணை நாளில், கங்கை, யமுனை, கோதாவரி, நருமதை, சரஸ்வதி, காவிரி, குமரி, பயோடினி,

சரயு முதலிய 9 நதிகளும் மகாமகக் குளத்தில் வந்து கூடுவ தாகச் சொல்லப்படும். அந்த நவ தீர்த்தங்களில் பலவகைப் பட்ட மாந்தர்களும் பல காலங்களில் வந்து நீராடிப் பாவங்களைப் போக்கிக்கொண்டதால், அந்தப் பாவங்களை ஏற்றுக்கொண்ட நவ தீர்த்தங்களும், மகாமகப் பெருநாளில் மகாமகக் குளத்தில் வந்து நீராடித் தங்கள் பாவங்களைப் போக்கிக் கொள்வதாக ஐதீகம். மேலும் பிரளயத்தில் மிதந்து வந்த கும்பத்திலிருந்த அமுதத்தின் ஒரு பகுதி வந்து தங்கிய இடமே மகாமகத்தீர்த்தம் என்றும், அமுத தீர்த்தமென்றும் சொல்லப்படும். இவ்விதப் பெருமைகளையுடைய மகாமகத் தீர்த்தத்தில், மகாமக நாளில், கும்பேஸ்வரர் தமது பரிவாரங் களுடன் பல வாகனங்களில் புறப்பட்டு வந்து தீர்த்தங் கொடுத்துக் காட்சிதருவர். அக்காட்சி கண்கொள்ளாக் காட்சி யாகும். கும்பேஸ்வரருக்கு நிகழும் திருவிழாவில் இவ்விழா கடைசி நாளில் நிகழும். அந்நாளில் நாட்டின் பல இடங் களிலுள்ள மக்கள் திரளாக வந்து மகாமகக் குளத்தில் நீராடி யும், குளக்கரைகளில் காட்சி கொடுக்கும் பல மூர்த்திகளைத் தரிசித்து அம்மூர்த்திகளின் திருவருளாகிய தீர்த்தத்தில் நீராடியும், வழிபட்டு இம்மை மறுமைகளுக்குரிய பல பேறு களைப் பெறுவார்கள். இத்தகைய பெருமைகளையுடைய 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் மகாமகப் பெருவிழா. இதற்கு முன் 1897, 1909, 1921, 1933, 1945, 1956 முதலிய ஆண்டு களில் நிகழ்ந்தது. இப்போது பிலவங்க மாசி 2-ம் நாள் (14—2—68) புதன்கிழமை நாளில் நடைபெறுகிறது.

---

## 17. புராண வரலாறுகள்

பக்தி மார்க்கத்தில் நின்று பரமனருளைப் பெற்ற முன் னோர் பலருடைய பழைய வரலாறுகளாகிய புராணங்கள், பின்னோராகிய மற்றையோரும் அவனருளை எளிதில் பெறுவ தற்கு வழிகாட்டிகளாக—சாதனங்களாக அமைந்துள்ளன. இனிப்புப் பொருளில் மருந்தை உள்ளடக்கித் தருவதுபோல்,

பல சாஸ்திரங்களின் உண்மைகளையும், தத்துவங்களையும் உள்ளடக்கிக் கதைவடிவங்களாக ஆன்றோர்கள் அமைத்தனர். அவ்வரலாறுகளைப் படிப்பதால், அவைகளில் அடங்கிய உண்மைகளைக் கைக்கொண்டு, முன்னோர்கள் சென்ற மார்க்கங்களில் பிறரும் சென்று வழிபடுவதற்குப் புராணங்கள் உதவக்கூடும்.

இத் தலத்தைப்பற்றிய வரலாறுகள் வடமொழியில் பவுடிகம், பிரமாண்டம், காந்தம் முதலிய புராணங்களில் சொல்லப் பட்டுள்ளன. தென் மொழியில் சிறந்து விளங்குவது, மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய **திருக்குடந்தைப் புராணம்** ஆகும். அது 70 படலங்களையும், 2384 செய்யுட்களையும் உடையது. சொற்சுவை, பொருட் சுவைகள் நிரம்பியது. அதில் உள்ள வரலாறுகளில் சில சுருக்கமாகக் கூறப்படும்.

**1. ஆதிகும்ப வரலாறு:** ஒரு காலத்தில் பிரமதேவன், கைலாயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானிடம் சென்று தனது குறையை முறையிட்டான், "பெருமானே! உலகமெல்லாவற்றையும் அழிக்கக் கூடிய பிரளயம் வரப்போகிறது. வேதம் முதலிய பொருள்கள் அழியுமே. சிருஷ்டி பீஜமும் அழிந்தால் நான் எவ்விதம் படைப்புத் தொழிலை மேற்கொள்வேன். அதற்கு ஓர் உபாயம் கூறவேண்டும்" என்றான். பெருமான் பிரமனை நோக்கி "அமுதத்தையும், மண்ணையும் சேர்த்துப் பிசைந்து மாயாமயமாகிய குடத்தைச் செய்து அதனுள் அமுதத்தை நிரப்பி அதனுள் யாம் தரும் விதையாகிய சிருஷ்டி பீஜத்தை வைக்க, அது எல்லாப் பொருள்களையும் உண்டாக்க வல்லது. குடத்தின்மேல் மாவிலை, வில்வம், தேங்காய், பூணூல் முதலியவைகளைச் சேர்த்து, அமுதத்தால் தெளித்து ஓர் உறியில் குடத்தை வைத்து மேரு மலையில் ஓர் இடத்தில் சேர்க்க, பிரளய வெள்ளத்தில் அக்குடம் மிதந்துவந்து தென் திசை நோக்கிச் செல்லும். அப்போது யாம் வந்து வேண்டுவன செய்வோம்" என்று ஆறுதல் மொழிகள் கூறி அனுப்பினார். பிரமதேவனும் அவ்வாறே செய்து சிவபெருமான் திருவருளை எதிர் பார்த்திருந்தார்.

பின்னர் சில நாட்களில் கடல்கள் எல்லாம் ஒன்றாய்க் கலந்து, பிரளய வெள்ளம் தோன்றி உலகத்தை அழிக்கத் தொடங்கியது. எங்கும் பெருமழை, பெருவெள்ளம், பெருங் காற்று. அப்போது சிவபெருமான் அருளியபடி, அமுதகும்பம் தென்திசை நோக்கி மிதந்துவந்து ஓர் இடத்தில் தங்கியது. குடத்தின்மேல் அணிந்திருந்த மாவிலை, தேங்காய், வில்வம், பூணூல் முதலியவை பெருங்காற்றால் சிதறுண்டு பல வேறிடங் களில் விழுந்தன. அவை விழுந்த இடங்களில் எல்லாம் தனித்தனி லிங்கங்கள் ஏற்பட்டுப் பற்பல கோயில்களாக விளங்குகின்றன. மாவிலை வன்னிமரமாயிற்று. அப்போது சிவபெருமான் வேட வடிவங்கொண்டு அமுதகும்பம் தங்கிய இடத்துக்கு வந்து தூரத்தில் இருந்தபடியே கும்பத்தின் மீது ஓர் அம்பை—பாணத்தை எய்தார், பாணம் எய்த இடம் பாணபுரி என்னும் தலமாகும். அந்த அம்பு அமுத கும்பத் தின் மூக்கைச் சிதைத்து அதன் மூலம் அமுதம் நாலாபக்கங் களிலும் பரவியது, இக்காரணத்தால் குடமூக்கு என்னும் பெயர் ஏற்பட்டது. பின்பு பெருமான் கும்பத்தை அணுகி அமுதத்தால் நனைந்த வெண்மணலை வாரிக் கும்பத்தில் சேர்த்து லிங்க வடிவாக்கித் தாமும் அதனுட் புகுந்து மறைந்தார். இவ்விதம் கும்பத்தில் தோன்றியதால் கும்பேஸ்வரர் என்றும், அமுதத்தில் உண்டானதால் அமுதேசர் என்றும் பெயர்கள் வழங்கலாயின. தேவியாரும் கயிலைமலையினின்றும் நீங்கிக் குடமூக்கை அடைந்து மங்களநாயகி என்னும் பெயர்பூண்டு யாவருக்கும் அருள்செய்து வருகின்றார்.

**"பூதமும் கடந்து பொறிகளும் கடந்து**
**புலன்களும் கடந்து மேற்கரண**
**பேதமும் கடந்து கலைமுதலாகப்**
**பிறங்குமோர் ஏழொடு விந்து**
**நாதமுங்கடந்து விளங்கும் ஓங்கொளியிந்**
**நானிலம் உயர்ந்திட மதமும்**
**கோதமும் கடந்தோர் உளங்கொள விழைந்தோர்**
**கும்பத்துத் தோன்றிய தன்றே."**

—திருக்குடந்தைப் புராணம்.

**2. பிரமன் வழிபட்டது :** பிரமதேவன், சிவபெருமானுடைய அற்புதச் செய்கைகளைக் கண்டு மகிழ்ந்து பெருமானையும், தேவியாரையும் வாயாரப் புகழ்ந்து போற்றினன். இறைவனை வேண்டி வரங்கிடந்தான். ஆதிகும்பேசரும் தேவியுடன் காட்சி கொடுத்தார். பெருமான் திருவருளால் படைப்புத் தொழிலை மீண்டும் பெற்றுன், பெருமானுக்கும், தேவியாருக்கும் திருவிழா நடத்த எண்ணினன். மூர்த்தி, தலம், தீர்த்தங்களை முதன்மையாகக்கொண்டு மாசி மாதத்தில் பூர்வ பட்சத்தில் வரும் அசுவதி நட்சத்திர நாளில் கொடியேற்றஞ் செய்து, பெருமானையும், தேவியையும் பல வாகனங்களில் எழுந்தருளச் செய்தான். எட்டு நாட்கள் வரையில் காலையிலும், மாலையிலும் கற்பகம், பூதம், சந்திரன், ரிஷபம், மலை. ரதம், குதிரை முதலிய வாகனங்களில் எழுந்தருளச் செய்தான், ஒன்பதாவது நாளில் மேருமலை போன்ற தேர்களைச் செய்வித்து அவற்றில் பஞ்சமூர்த்திகளையும் எழுந்தருளச் செய்தான். தேரில் உலா வரும்போது, அடியார் அனைவரும் தரிசித்துப் பேரானந்தம் அடைந்தனர். பற்பல பக்குவ நிலையிலிருந்த ஆன்மாக்களாகிய பெண்கள் பெருமானிடம் அன்புகொண்டு மெய்மறந்து நின்றுர்கள். பத்தாவது —மக நாளில் பஞ்ச மூர்த்திகளையும் பல வாகனங்களில் புறப்படச் செய்து, மகாமகத் தீர்த்தத்தில் தீர்த்தங் கொடுப்பதாகிய மாசி மக விழாவையும் நடத்தி வைத்தான். பிரமன் தொடங்கிவைத்த அந்தத் திருவிழாவே, ஆண்டுதோறும் மாசி மாதத்தில் நடைபெற்று வருகிறது.

**"எவன்மறை முழுதும் ஏத்திடப்படுவான்**
**எவன்மறை முடிவில் வீற்றிருப்பான்**
**எவன்மறை முடிவும் உணர்தரப் படாதான்**
**எவன் உயிர்க்குயிரெனப் படுவான்**
**எவன்வெளி முதலைம் பூதமுமாகி**
**இயம்பிய வல்லவும் ஆவான்**
**அவன் ஒருகுடமூக் கமர்பர சிவன்மற்**
**றவனடித் துணைமலர் தொழுவேன்."**

—திருக்குடந்தைப் புராணம்.

**3. கரும்பாயிர விநாயகர் :** ஒரு காலத்தில் கும்பேசப் பெருமானைத் தரிசிக்க வந்த முனிவர்களுடன் ஓர் கரும்பு வியாபாரியும் ஆயிரம் கரும்புகளுடன் வராகக் குளக்கரையில் வந்து தங்கினான். அங்கிருந்த விநாயகர், அந்தணச் சிறுவன் வேடங்கொண்டு ஷெ வியாபாரியிடம் சென்று தனக்கு ஓர் கரும்பு கொடுக்கும்படி கேட்டார். அவன் கொடுக்க மறுக்கவே அச்சிறுவன் (விநாயகர்) ஒரு கரும்பைப் பிடித்து இழுக்கவே அதனால் கோபங்கொண்ட வியாபாரி, விநாயகராகிய சிறுவனை அடிப்பதற்குத் துரத்திக்கொண்டு செல்ல, அப்போது சிறுவன் ஷெ விநாயகர் கோயிலுக்குள் ஓடி மறைந்து விட்டான், பிறகு வியாபாரியின் ஆயிரம் கரும்புகளும் சாரமற்றுச் சக்கை போலாகி விட்டன. இதை அறிந்த வியாபாரி வருந்தி விநாயகரிடம் வேண்டி நின்றான். அப்போது விநாயகர், அந்த ஆயிரம் கரும்புகளுக்கும் மீண்டும் சாரத்தைச் கொடுத்தார். அதுமுதல் அவருக்கு கரும்பாயிரம் பிள்ளையார் என்ற பெயர் ஏற்பட்டது. இக் கோயில் ஸ்ரீ கும்பேசுவரசுவாமி திருமஞ்சன வீதியில், வராகக் குளக்கரையில் வடமேற்கு மூலையில் இருக்கிறது. இதற்கு ஆதியில் ஸ்ரீவராகப்பிள்ளையார் என்ற பெயர் வழங்கியது.

**"அருகரும்புத் தரும்வியப்ப அவனியொரு**
**கோட்டுநுனி அமைத்துத் தீயோர்**
**திருகரும்புக் கிடங்கொடாச் செங்கண்வரி**
**கழும்கிழத் தேதே யென்று**
**வருகரும்புட் குலமுழக்கு மலர்க்கேழற்**
**புனற் கோட்டோர் வணிகன் பாங்கர்**
**ஒருகரும்புக் காயிரங்கொண் டுறுகரும்பா**
**யிரக்களிற்றை உளங்கொள் வோமே."**

— *திருக்குடந்தைப்புராணம்.*

**4. மூர்க்கநாயனார் வரலாறு :** தொண்டை நாட்டில், திருவேற்காடு என்னும் பதியில் வேளாளர் குலத்தில் ஒருவர், சிவனடியார்களைச் சிவன் எனவே வணங்கி அவர்க்கு உணவு அளித்தும், அவர் வேண்டும் பொருள்களைக் கொடுத்தும் வழி பட்டு வந்தார். இவ்விதம் செய்துவரும் நாளில், அடியார்கள் மேலும் மேலும் வரத் தம்மிடம் உள்ள அடிமை, நிலம்

முதலியவைகளை விற்றும் அடியார்களை உபசரித்தலாகிய வழிபாட்டை நடத்திவந்தார். மேலும் பொருள் இல்லாமையால் வேறு பல இடங்களுக்கும் சென்று சூதாட்டம் ஆடிப் பொருள் சம்பாதித்து அடியார்களை உபசரித்து முடிவில் கும்பகோணத்தை அடைந்து அங்கும் சூதில் முதலில் தோற்றுப் பின் ஆட்டங்களில் வென்று, பொருள் சேர்த்துத் தம் தொண்டை நடத்தி வந்தார். சூதில் வல்லவராயும், கோபம் மிக்கவராயும் இருந்ததால் நற்சூதர், மூர்க்கர் என்னும் பெயர்களைப் பெற்றார். இவ்வாறு சூதினால் பொருள்தேடி அடியார்களைப் பலகாலம் உபசரித்து அந்தச் சிவபுண்ணியத்தால் இறைவன் திருவடியை அடைந்தார். இவர் அடைந்த நாள் கார்த்திகை மாதம் மூல நட்சத்திரம் ஆகும், அந்நாளில் இவருடைய விழாவும் கொண்டாடப் படுகிறது.

**"தொண்டைவள நாட்டுவளர் வேற்காட்டூர்வாழ்**
**தொல்லுழவர் நற்சூதர் சூதுவென்று**
**கொண்டபொருள் கொண்டன்பர்க் கமுதளிக்கும்**
**கொள்கையினர் திருக்குடந்தை குறுகியுள்ளார்**
**விண்டிசைவு குழறுமொழி வீணர்மாள**
**வெகுண்டிடலான் மூர்க்கரென விளம்பும் நாமம்**
**எண்டிசையும் மிகவுடையார் அண்டர்போற்றும்**
**ஏழுலகம் உடனாரும் இயல்பினரே."**

— *புராணசாரம்.*


**"தொண்டர்புகழ் வேற்காட்டுத் தூய்மூர்க்கர் வேளாளர்**
**அண்டர்பிரான் அடியார்க் கன்னமிட—கொண்டதொரு**
**சூதிற்கரிகை குத்தித் தோல்வியின்றிக் கொண்டநிதி**
**நீதியிலளித் துயர்ந்தார்நேர்."**

— *பெரியபுராண சாரவெண்பா.*

**5. பிற வரலாறுகள் :** மேலும் இத்தலத்தில் **சண்டி** என்பவள் கூடா ஒழுக்கம் உடையவராய்ப் பல பாவங்களைச் செய்து இங்கு வந்து தீர்த்தத்தில் நீராடிப் பெருமானை வழி பட்டுப் பேறுபெற்றாள். **சுதன்மன்** என்னும் அந்தணனுக்குப் பல மனைவிகளும், அவர்கள் மூலமாகப் பல பிள்ளைகளும் பிறந்து இறக்கவே, அகத்தியரின் மாணாக்கர் குசிகரின் உபதேசப்படி இத்தலத்து வந்து வழிபட்டு நலமடைந்தான்.



யானை வாகன அம்பாரி — ஏகாசனம்



கைலாச வாகனம் — ஏகாசனம்

கேகய நாட்டை ஆண்ட **கிருதவீரியன்** என்பவன் பல மனைவிகளை அடைந்தும், குழந்தைப் பேறில்லாமல் வருந்திய போது சாகல்லியன் என்னும் முனிவன், அரசனுடைய முற் பிறப்பில் நேர்ந்த குற்றங்களைக் கூறி அவை நீங்குமாறு உப தேசிக்க, அரசன் தேவியுடன் இத்தலத்துக்கு வந்து நீராடி வழிபட்டு ஓர் புதல்வனைப் பெற்றெடுத்து வாழ்ந்து முத்தி பெற்றான். கலிங்க தேசத்து அரசன் **வீரவர்மன்** என்பவனது மனைவி ஓர் கண்ணில்லாக் குழந்தையைப் பெற்றுக் கவலையுற் றிருந்தபோது, சாண்டில்ய முனிவனுடைய உபதேசத்தால் இத்தலத்துக்கு வந்து நீராடி வழிபட்டுப் பல திருப்பணிகளை யும், தானங்களையும் செய்து முருகனைப்போன்ற அழகிய புதல்வனைப் பெற்று முக்தியடைந்தான். ஏமவாகு என்பவ னுடைய மனைவி **சுலோசனை** என்பவள், வேதாளத்தால் பிடிக்கப்பட்டுத் துன்புறும்போது, கார்க்கிய முனிவரின் உப தேசத்தால் காசியாத்திரை சென்று இருவரும் கங்கை நதியில் நீராடினார்கள். அன்று மக நாளானதால், கங்கை கும்ப கோணத்திற்கு வரவே, கங்கையுடன் அரசனும், மனைவியும் வந்து மகாமகக் குளக்கரையில் தோன்றினார்கள். சுலோசனை தருமவாகு என்னும் புதல்வனைப் பெற்றாள். பிறகு இருவரும் தன்னுடு சேர்ந்து முத்தி பெற்றார்கள். எக்கியசீலன் என்னும் அந்தணன் மகன் **ஞானவான்** தந்தையின் யாகத்திற்குத் துணையாயிருந்து, கந்தர்வர்களின் உபதேசத்தால் இத்தலத் துக்கு வந்து நீராடி வழிபட்டுப் பல புதல்வர்களைப் பெற்றுப் பேறடைந்தான். **சுவர்ணரோமன்** என்பவன் இருட்டரோம மன்னனின் புதல்வன். இவன் மனைவி சதி என்பவள். அரச னும்,மனைவியும் தீர்த்த யாத்திரை செய்தபோது, அவன் நாட் டைப் பகைவர்கள் கைக்கொள்ளவே, சௌனகரின் உபதேசப் படி கும்பகோணம் வந்து நீராடி வழிபட்டு, வாள்படை பெற்றுப் பகைவரைப் போக்கித் தேசத்தை மீட்டு வாழ்ந்து முத்திபெற்றான். **மாந்தாதா** சித்திரை விழாச் சிறப்புற நடத் திப் பேறுபெற்றான். **இந்திரன்** வழிபட்டுப் புத்திரப் பேறு பெற்றான். இவர்களைப்போலவே வேறு பலரும் இத்தலத் துக்கு வந்து நீராடிப் பெருமானை வழிபட்டுப் பேறு பெற் றுள்ளார்கள். ஆதிகும்பேசப் பெருமானும், தன்னை அன்பு டன் வழிபடும் அடியார்களுக்கு அன்றும், இன்றும், என்றும் அருள் செய்து வருகின்றார்.



---

# 18. இலக்கியப் பாடல்கள்

---

## திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

## மூன்றாம் திருமுறை

---

### *திருக்குடமூக்கு: பண்—பஞ்சமம்*

*திருச்சிற்றம்பலம்.*

அரவிரி கோடனீட லணிகாவிரி யாற்றயலே
மரவிரி போதுமௌவல் மணமல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந்தானவ னெம்மிறையே. 1

ஒத்தர வங்களோடு மொலிகாவிரி யார்த்தயலே
பூத்தர வங்களோடும் புகைகொண்டடி போற்றிநல்ல
கூத்தர வங்களோவாக் குழகன்குட மூக்கிடமா
ஏத்தர வங்கள்செய்ய இருந்தானவ னெம்மிறையே. 2

மயில்பெடை புல்கியால மணல்மேல்மட அன்னமல்கும்
பயில்பெடை வண்டுபண் செய்பழங் காவிரிப்பைம் பொழில்வாய்க்
குயில்பெடை யோடுபாட லுடையான்குட மூக்கிடமா
இயலொடு வானமேத்த இருந்தானவ னெம்மிறையே. 3

மிக்கரை தாழவேங்கை யுரியார்த்துமை யாள்வெருவ
அக்கர வாமையேன மருப்போடவை பூண்டழகார்
கொக்கரை யோடுபாட லுடையான்குட மூக்கிடமா
எக்கரை யாருமேத்த இருந்தானவ னெம்மிறையே. 4

வடிவுடை வாட்டடங்க ணுமையஞ்சவோர் வாரணத்தைப்
பொடியணி மேனிமூடவுரி கொண்டவன் புன்சடையான்
கொடிநெடு மாடமோங்கும் குழகன்குட மூக்கிடமா
இடி படுவானமேத்த இருந்தானவ னெம்மிறையே. 5

கழைவளர் கவ்வைமுத்தங் கமழ்காவிரி யாற்றயலே
தழைவளர் மாவின்நல்ல பலவின்கனி கள்தயங்கும்
குழைவளர் சோலைசூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இழைவளர் மங்கையோடு மிருந்தானவ னெம்மிறையே. 6

மலைமலி மங்கைபாகம் மகிழ்ந்தானெழில் வையமுய்யச்
சிலைமலி வெங்கணையாற் சிதைத்தான்புர மூன்றினையும்
குலைமலி தண்பலவின் பழம்வீழ்குட மூக்கிடமா
இலைமலி சூலமேந்தி யிருந்தானவ னெம்மிறையே. 7

நெடுமுடி பத்துடைய நிகழ்வாளரக் கன்னுடலைப்
படுமிடர் கண்டயரப் பருமால்வரைக் கீழடர்த்தான்
கொடுமடல் தங்குதெங்கு பழம்வீழ்குட மூக்கிடமா
இடுமண லெக்கர்சூழ இருந்தானவ னெம்மிறையே. 8

ஆரெரி யாழியானு மலரானு மளப்பரிய
நீரிரி புன்சடைமேல் நிரம்பாமதி சூடிநல்ல
கூரெரி யாகிநீண்ட குழகன்குட மூக்கிடமா
ஈரிரு கோவணத்தோ டிருந்தானவ னெம்மிறையே. 9

மூடிய சீவரத்தார் முதுமட்டையர் மோட்டமணர்
நாடிய தேவரெல்லா நயந்தேத்திய நன்னலத்தான்
கூடிய குன்றமெல்லா முடையான்குட மூக்கிடமா
ஏடலர் கொன்றைசூடி யிருந்தானவ னெம்மிறையே. 10

வெண்கொடி மாடமோங்கு விறல்வெங்குரு நன்னகரான்
நண்பொடு நின்றசீரான் தமிழ்ஞான சம்பந்தனல்ல
தண்குட மூக்கமர்ந்தா னடிசேர்தமிழ் பத்தும்வல்லார்
விண்புடை மேலுலகம் வியப்பெய்துவர் வீடெளிதே. 11

*திருச்சிற்றம்பலம்.*

—:*:—

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

## ஐந்தாம் திருமுறை

### *திருக்குடமூக்கு: திருக்குறுந்தொகை*

*திருச்சிற்றம்பலம்.*

பூவ ணத்தவன் புண்ணிய னண்ணியங்
காவ ணத்துடை யானடி யார்களைத்
தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்
கோவ ணத்துடை யான்குட மூக்கிலே. 1

பூத்தா டிக்கழி யாதேநீர் பூமியீர்
தீத்தா டித்திறஞ் சிந்தையுள் வைம்மினோ
வேர்த்தா டுங்காளி தன்விசை தீர்கென்று
கூத்தா டியுறை யுங்குட மூக்கிலே. 2

நங்கை யாளுமை யாளுறை நாதனார்
அங்கை யாளொ டறுபதந் தாழ்சடைக்
கங்கை யாளவள் கன்னி யெனப்படும்
கொங்கை யாள்உறை யுங்குட மூக்கிலே. 3

ஓதா நாவன் திறத்தை யுரைத்திரேல்
ஏதா னும்மினி தாகும் மியமுனே
சேதா ஏறுடை யானமர்ந் தவிடம்
கோதா விரியுறை யுங்குட மூக்கிலே. 4

நக்க ரையனை நாடொறும் நன்னெஞ்சே
வக்க ரையுற வானை வணங்குநீ
அக்க ரையோ டரவரை யார்த்தவன்
கொக்க ரையுடை யான்குட மூக்கிலே 5

துறவி நெஞ்சின ராகிய தொண்டர்காள்
பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தராய்
மறவனாய்ப் பார்த்தன் மேற்கணை தொட்டஎங்
குறவ னார்உறை யுங்குட மூக்கிலே. 6

தொண்ட ராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினை பற்றற வேண்டுவீர்
விண்ட வர்புரம் மூன்றொரு மாத்திரைக்
கொண்ட வன்உறை யுங்குட மூக்கிலே. 7

காமி யஞ்செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ
சாமி யோடு சரச்சு வதியவள்
கோமி யும்உறை யுங்குட மூக்கிலே. 8

சிரமஞ் செய்து சிவனுக்குப் பத்தராய்ப்
பரம னைப்பல நாளும் பயிற்றுமின்
பிரமன் மாலொடு மற்றொழிந் தார்க்கெலாம்
குரவ னார்உறை யுங்குட மூக்கிலே. 9

அன்று தானரக் கன்க யிலாயத்தைச்
சென்று தானெடுக் கஉமை அஞ்சலும்
ஒன்று தான்நக்கு நல்விர லூன்றிப்பின்
கொன்று கீதங்கேட் டான்குட மூக்கிலே. 10

*திருச்சிற்றம்பலம்.*

# திருத்தாண்டகம்

## ஆறும் திருமுறை

---

விடமூக்கப் பாம்பேபோற் சீந்திநெஞ்சே
வெள்ளேற்றான் தன்தமரைக் கண்டபோது
வடமூக்க மாமுனிவர் போலச்சென்று
மாதவத்தார் மனத்துளார் மழுவாட்செல்வர்
படமூக்கப் பாம்பணையிற் பள்ளியானும்
பங்கயத்து மேலயனும் பரவிக்காணாக்
குடமூக்கே குடமூக்கே என்பீராகில்
கொடுவினைகள் தீர்ந்தரனைக் குறுகலாமே.

## திருக்குடந்தைப் புராணம்

*மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றியது.*

### ஆதிவிநாயகர்

பூமேவு தமதருளால் உயருமுயர்
விலதுமெனப் புவனங் கூறும்
மாமேவு மொழிக்கிளைய உயர்திணையின்
அஃறிணைமா வதனங் கொண்டோர்
யாமேவு முறையிணைந்து மருளமைந்து
பயில்வதுபோற் பயிலா தென்றுந்
தாமேவும் அருளமைந்த ஆதிவிநா
யகர் சரணம்சார்ந்து வாழ்வாம்.

### குமாரக்கடவுள்

நீர்முதல்யா முதலென்று நெடியோனா
தியரென்று நிகழ்த்தா வண்ணம்
சூர்முதலே திகள்சிறிதும் வடுச்செய்யாத்
தன்கரத்திற் றுணைப்பூந் தாளிப்
பார்முதலாக் குனன்றலையும் அவன்முதலோர்
முடியும் வடுப்படுத்த நோக்கி
நார்முதனெஞ் சிருவர்முலை நிறம்புயத்தும்
செயமகிழ்வோன் நமையாள் வானே.

## ஆதிகும்பேசர்

பூமேய வாரணனும் நாரணனும்
வாரணனும் பொற்பூ மாலைத்
தேமேய விண்ணவரும் நண்ணவரும்
பசுமுலதாஞ் சிறப்பு நல்கி
மாமேய குடமூக்கி னிடமூக்கின்
பார்கருணை வடிவின் மேய
பாமேய புகழாதி கும்பேசர்
தாமரைத்தாள் பணிந்து வாழ்வாம்.

ஐயனே போற்றிமுக்கண் அமலனே போற்றிசூலக்
கையனே போற்றிநெற்றிக் கண்ணனே போற்றிமேனிச்
செய்யனே போற்றிநங்காச் செல்வனே போற்றிவெய்யோன்
வெய்யனே போற்றிஎங்கும் விளங்கு கும்பேசபோற்றி.

## மங்களநாயகி

பரவுமலர்க் கருங்குழலும் செவ்வாயும்
வெண்ணகையும் பசிய தோளும்
விரிவுசுவை மொழியுமெழில் வழியுமருள்
பொழியுமிரு விழியும் ஞானத்
துரவுமலி தன்தடமும் கொடியிடையும்
பட்டுடையும் ஒளிர்பூங் கையும்
கரவுதவிர் மங்களநாயகி இருதாள்
மலரும் உளங்கருதி வாழ்வாம்.

எண்ணிய அனைத்தும் எண்ணியாங்கெய்த
எண்ணிய அடியவர்க் கருளும்
புண்ணியமுதலே பூரணப் பொருளே
போக்கருஞ் சுடர்ப்பெரு விளக்கே
தண்ணிய சாந்தரூபியே நாளும்
தவாதமந் திராசன வாழ்வே
மண்ணியமணியே வளமலி குடந்தை
மங்களையே நின்தாள் போற்றி.

## ஆடவல்லார் (நடராஜர்)

மன்னுமலப் பகைபுணர்தீர்த் தான்மமக
டூஉப்புணரும் வலியான் மிக்குத்
துன்னுநிக மாகமஞ்சொல் வலியாலாட்
கொளும் வலியால்தோலா அன்பால்
இன்னுநட நவில்வலியால் ஆடல்வல்லார்
எனும்பெயர் பூண்டேம மன்றுள்
பன்னுகருணை யின்மருவு மாதேவர்
குஞ்சிதத்தாள் பரசி வாழ்வாம்.

## தக்ஷிணாமூர்த்தி

விதிவிலக் குயிர்க்கேஅன்றி மிளிர்தமக் கில்லைஎன்று
துதிமறை உரைத்தவரே துணிதரத் தாமாகாதாய்
மதியமை தெற்குநோக்கி வடக்குமாணுக்கர் நோக்கப்
பொதியவிழ் கல்லால்நீழல் பொலிபவர்க் கன்புசெய்வாம்.

## திருநந்திதேவர்

புரவனைக் கொருபானல்கு புராணன்பாலனைத்துந் தேர்ந்து
குரவனைச் சிவனேயென்று பாவனைசெயச்சொல் கூற்றம்
பரவனைத் துயிர்க்கு மாக்கிப்பதி வருக்கத்துமேய
உரவனைக் கயிலைகாக்கும் ஒருவனைப் பணிதல்செய்வாம்.

## திருஞானசம்பந்தர்

காலமே கருத்தா வென்று
கரைபவர் ஊமராகக்
காலமே பொலியும் கொங்கிற்
கொடும்பனிக் காலத்தீமை
சாலமே விய துணர்ந்து
தவிர்த்துமாதேவன் சீர்த்தி
ஞாலமேல் விரித்த காழி
நாடனைப் பாடிவாழ்வாம்.

## திருநாவுக்கரசர்

ஒருகவி மீட்பான் காலற்
  கோலையொன் றெழுதியச்சும்
பெருகவுந் தோற்றி யுய்த்த
  பெருஞ்சிலை இராமனுணத்
தருகவப் பூதிமைந்தன்
  தனையெனக் காலகாலற்
கருகலில் பதிகம்பாடி
  அருளினோர்க் கன்புசெய்வாம்.

## சுந்தரமூர்த்தி நாயனார்

வெய்யாமல் களிறு பாய்மா
  வெறுக்கைமுற் கொடுக்கப்பெற்றும்
வைய மேற் றூதுபோக
  வழுத்தியுஞ் சிவபிரானுக்
கையமேற் பான்பேர்க் காக்கி
  அடியவர்க் கெளியான் என்னும்
செய்யபேர் நிறுத்த நாவற்
  செல்வனைச் சேர்ந்து வாழ்வாம்.

## மாணிக்கவாசகர்

ஒலிகெழு குதிரைச் சென்னி
  உவந்தினி தேறிவைகும்
வலிகெழு மெண்டோ ளண்ணல்
  மற்றதன் முதுகுலேறிப்
பொலிகெழு மதுரை வீதி
  புகுந்துநன் கியக்கக்கண்ட
கலிகெழு புகழ்சால் வாத
  வூரர்தாள் கலந்து வாழ்வாம்.

## தண்டீச நாயனார்

ஆதி நிலையுண்டாக்கு தலின்
  அம்போருகமே லவன்றண்டாய்
நீதி மருவப் பசுவோம்பு
  நிகழ்ச்சியான்மா அவன்றண்டாய்

மோதி யொருவேதிய னுயிரை
முடித்தலாற் கூற்றுவன்றண்டாய்ச்
சோதி வயங்கும் ஒருதணடஞ்
சுமந்தார் அடிகள் தொழுதெழுவாம்.

## அறுபத்துமூவர்

வெய்ய காமமுதலிய மேவினும்
செய்ய தாகத்திருத்தி வசிப்பரால்
ஐயநாளும் அறுபத்து மூவரும்
வையமேத் தருள்மாண்பி னெம்முள்ளத்தே.

## ஸ்ரீ மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ்

*மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றியது.*

*இழியுந் தொழிலிற் புகுத்துமல*
*இருட்டும் விளக்குங் கருங்குழலும்*
*எழில் கொப்புளிக்கும் திருமுகமும்*
*இருகை யுதித்த பெருவெள்ளங்*
*கழியுந் திவலையா யொடுங்கக்*
*கச்சமில்லா அருள் வெள்ளம்*
*கதிக்கப் பொழியுங் கடைக்கண்ணும்*
*கருது ஞானம் பொழிதனமும்*
*பழியு மறமுங் கடந்தன்பர்*
*பற்றத் தகுமோர் பற்றாய்*
*பாதாம் புயமும் மிகப்பொலிந்து*
*பரவப் பரவு வெள்ளருவி*
*வழியும் இமயவரைப் பிறந்த*
*வனிதாய் வருக வருகவே*
*மறைவாழ்த் தொலிசால் திருக்குடந்தை*
*மடந்தாய் வருக வருகவே.*

## திருக்குடந்தைத் திரிபந்தாதி

*ஷை ஆசிரியர் இயற்றியது.*

**நன்றுதரித்த குடந்தைப்பிரானை நயந்துவெள்ளிக்**
**குன்றுதரித்த மழுவாவெனத் துதிக்கூறக்கற்றோம்**
**பொன்றுதரித்த வினைகாளெமை விட்டுப்போய்விரைவி**
**னன்றுதரித்தகையோ ராரவரை யடைமின்களே.**

பதப்பிரிவு: *நன்று ஆதரித்த குடந்தைப்பிரானை நயந்து வெள்ளிக்*
*குன்று தரித்தமழுவா எனத்துதி கூறக்கற்றோம்.*
*பொன்றுது அரித்த வினைகாள் எமை விட்டுப்போய்*
*விரைவின் அன்று ஆதர் இத்தகையோரார் அவரை*
*அடைமின்களே.*

## சிவநாமப் பல்தொடை வெண்பா

**பேரெயில் சூழ்ந்தின்பம் பெருகுங் குடமூக்குக்**
**கூரயிற்கண் மங்களஞ் சேர் கும்பேசா.**

## அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்

*மாலைதனில்வந்து வீதிதனில்நின்று*
*வாசமலர்சிந்து குழல்கோதி*
*வாரிருதனங்கள் பூணொடுகுலுங்க*
*மால்பெருகிநின்ற மடவாரைச்*
*சாலைவழிவந்து போமவர்கணின்று*
*தாழ்குழல்கள்கண்டு தடுமாறித்*
*தாகமயல்கொண்டு மாலிருளமுந்தி*
*சாலமிகுநொந்து தவியாமல்*
*காலையிலெழுந்து ஞைமெமொழிந்து*
*காதலுமைமைந்த எனவோதிக்*
*காலமுமுணர்ந்து ஞானவெளிக்கண்கள்*
*காணஅருளென்று பெறுவேனோ*
*கோலமுடனன்று சூர்படையின்முன்பு*
*கோபமுடனின்ற குமரேசா*
*தோதையிருபங்கின் மேவவளர்கும்ப*
**கோணநகர்**வந்த பெருமாளே.

## கும்பேசர் குறவஞ்சி

*பாபநாச முதலியார் இயற்றியது.*

(குறவஞ்சி என்பது குறத்திப் பாட்டு.
கும்பேசர்மீது காதல்கொள்ளும் ஓர் பெண்ணுக்குக் குறத்திக் குறி சொல்வது)

**"தரிசனம் பாவநாசம் என்றஅகல கிரிகள்இன்னம்
சொல்லித் தொலையாதே அடிமாதே நான்"**

## தனிப்பாடல்

*இதில் திருத்தங்கி என்ற செல்வந்தனுடைய உலோபத்தையும்,
மருத்தன் என்ற வள்ளலின் கொடையையும்
சேர்த்துப் பாடியுள்ளார்.*

திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்
மருத்தன் திருக்குடந்தை வாழை—குருத்தும்
இலையுமிலை பூவுமிலை காயுமிலை என்றும்
உலகில் வருவிருந்தோர் உண்டு.

திருக்குடந்தை யாதிகும்பேசர் செந்தா
மரைக்குளங் கங்கைமகங்கா—விரிக்கரையின்
ஓரங்கீழ்க் கோட்டங்கா ரோணமங்கை நாயகியார்
சாரங்கபாணித்தலம்.

(குடந்தைக் கோயில்களும், குளங்களும்

# வாழ்த்து


---

முன்னுபுகழ்ச் சோணாடு வாழ்கதிருக்
குடந்தையெனு மூதூர் வாழ்க
மன்னுபெருஞ் சைவமிக வாழ்கஇடை
மருதர்முதல் வானோர் வாழ்க
பன்னுதிரு மங்களநா யகிவாழ்க
கும்பேசர் பண்பு வாழ்க
மின்னுதிரு வம்பலத்துள் அவரெடுத்த
குஞ்சிதத்தாள் மென்மேல் வாழ்க.

---

**ஸ்ரீ ஆதிகும்பேசர் அடிமலர் போற்றி.**

ஸெண்ட்ரல் பிரஸ் ஸிண்டிகேட் (P) லிமிடெட், கும்பகோணம். 12–67 C. 2000



மகாமகக்குளம் தீர்த்தகட்டம்